B.Ed.,
Pedagogy of Tamil II
Unit 1

*நுண்நிலை கற்றுத் தருவதில் வினா கேட்டலின் உட்கூறுகள்*

உயர்நிலை வினாக்களின் உட்கூறுகள்

1) சாதாரண வினாக்கள்
2) இடைநிலை வினாக்கள்
3) உயர்நிலை வினாக்கள்

*வட்டார வழக்கு*

மொழி பேசுதலில் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் மட்டும் பேசுவது வட்டார வழக்கு எனப்படும். தஞ்சை, மதுரை, கோவை இங்கே சில சொற்கள் அங்குள்ளவர்கட்கு மட்டும் புழக்கத்தில் இருக்கும்.

*நா பிறழ் பயிற்சி*

நாவினுடைய முயற்சியினால் எழுத்துகள் பிறக்கின்றன, அவை, ற,ர,ள,ழ,ல,ள,ர என்ற எழுத்துக்களை உச்சரித்து கற்றுக்கொள்ள நா பயிற்சி அளிக்க வேண்டும்.

*நேர்வழி திட்டமிட்டுக் கற்றல்*

இந்நேர் வழி திட்டமிட்டு கற்றல் நீள்முறையில் அமைப்பு என்றும் கூறுவர். இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள பாடப்பொருள், தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக ஒரு பகுதிக்கான சரியான விடை அடுத்த பகுதியல் இருக்கும். ஒவ்வொரு பகுதியும் சிறுசிறு கட்டங்களாக அமைக்கப்பட்டிருக்கும்.

*உயிரொலி எங்ஙனம் பிறக்கின்றது*

உயிரொலிகள் அனைத்தும் மிடற்றினை இடமாக கொண்டு பிறக்கின்றன (தொண்மை) தொழிற்பாடு வேறுபாடுகள் வேறுவேறு ஒலிகளாக உருப்பெறுகின்றன.

*கற்பித்தல் குறிப்பு*

மொழியை மையமாகக் கொண்டு ஒருவர் அறிந்த ஒன்றை மற்றவர்கட்கு (மாணவர்கட்கு) கற்றுக்கொடுதத்லை கற்பித்தல் என்றே அழைக்கின்றோம். அதற்காக தயாரிக்கப்படும் குறிப்புகளே கற்பித்தல் குறிப்பு என்று பெயர். பாடத்திட்டம் என்றும் அழைப்பதுண்டு.

*சுருக்கி வரைதலின் பயன்கள்*

1) சுருக்கி வரைதல் என்ற திறனை கற்கின்றனர்.
2) பெரிய அளவில் உள்ளதை சிறிய அளவிலே சுருக்கி தேவையான போது பார்த்துக்கொள்ள முடியும்.
3) தேர்வு நேரத்தில் கைகொடுக்கும் சுருக்கக் குறிப்பு.
4) கருத்தினை சுருக்குவதால் காலம் (குறைவாக) உதவும்.

*ஒலியெண். சான்று தருக.*

மொழியில் உள்ள எழுத்துக்கள் யாவும் ஒரு ஒலியெண் பெற்றிருக்கும். சில எழுத்துக்களில் ஒரே ஒலியுடையனவாக இருப்பின் சேர்த்து ஒரே ஒலி எண்ணை பெறும். மொழியினுடைய வரி வடிவத்திற்கு ஒலி வடிவமே ஆகும். இது எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு பயன்படும்.

உதாரணம் : க, என்ற ஒலி எண்களின் உள்ளடக்கம். பக்கம், நகரம், தங்கம் போன்றும், ஞ், ங், பங்கு, அஞ்சுதல்.

*மொழியியல் அடிப்படையில் மெய்யொலியின் வகைகள்*

மொழியியல் அடிப்படையில் மெய்யொலிகள் ஏழு வகைகளாக பாகுபடுத்தியுள்ளனர்.

1) குரலில்லாத் தடையொலி குரல் நிறை தடையொலி ப.க. தடையொலி.

2) உரசல் தடையொலி குரலில்லா உரசல் தடையொலி , குரல் நிறை உரசல் தடையொலி – ச

3) உரசல் ஒலி – குரலில்லா , குரல்நிறை உரசல் ஒலி – ஸ

4) மூச்சொலி ம,ங,ன

5) ஏகர ஒலி – ர்

6) வருடொலி – ட

7) அரைவுயிர்ரொலி – ப்வ்

*துணைக் கருவிகளின் வகைகள்*

துணைக் கருவிகளின் வகைகள் மூன்று வகைப்படும் அவை.

1) காட்சித் துணைக் கருவிகள்

2) கேள்வித் துணைக் கருவிகள்

3) காட்சிக் கேள்வித் துணைக் கருவிகள். என மூன்று வகைப்படும். இதன் உட்பிரிவுகளும் உண்டு.

## Unit 2

*தொழில்நுட்பக் கலைச் சொற்களை உருவாக்கும் போது மனதில் கொள்ளத்தக்க செய்திகள் யாவை*

தொழில் நுட்ப கலைச்சொற்களை உருவாக்கும் போது மனதில் கொள்ளத்தக்க செய்திகளை காண்போம் அவைகள்.

1) பல்துறை அறிவு :

பல்துறை அறிவு பெற்றவராக இருத்தல் அவசியம் அப்போதுதான் அதன் சரியான பொருளை தமிழில் சொல்லமுடியும்.

2) பொது நோக்குடையவர் :

தனது விருப்பததை புகுத்தாமல் பொது நோக்குடையவராக அமைதல் வேண்டும்.

3) கலைச்சொல் வளம் நிறைந்தவராக இருக்க வேண்டும்.

4) அனைவரும் ஏற்கும் வண்ணம் அமைத்தல் வேண்டும்.

*அயல் மொழி கற்பித்தலில் மொழி பயிற்றாய்வுக்கூடத்தின் பங்கு*

தாய்மொழி அல்லாத பிறமொழி ஒன்றை கற்றுக்கொள்ள மொழிபயிற்றாய்வுக்கூடம் பயன்படுகிறது. மேலை நாடுகளில் வளர்ச்சி பெற்ற நிலை இப்போது இங்கும் வெகுவாக வளர்ந்துள்ளது. பொதுவாக பிற மொழியினைக் கற்றுக்கொள்ள அம்மொழியை தாய் மொழியாகக் கொண்டவரையே பேசச்செய்து பதிவு செய்து கேள்வி / பேச்சு பயிற்சிக்கு இப்பயிற்சிக் கூடம் வாய்ப்பளிக்கிறது. திட்டமிட்டு செயல்படுத்தினால் சிறந்த பயனை அடையலாம். பிறமொழியை எளிதில் நமதாக்கிக்கொள்ள இப்பயிற்றாய்வுக் கூடம் உதவியாக அமைகிறது.

*தமிழில் பிறமொழி கலப்பிற்கான காரணங்கள்*

1) அந்நியர்கள் நம்பகுதியல் ஆண்டதன் காரணமாக மொழியில் பிறமொழி கலந்தது.

2) நமக்கு அந்நிய மொழி ஆர்வம் மிகுதியால் அதன் தொடர்பில் கலந்தது.

3) மக்கள் தன் வளத்தை பெருக்கிக் கொள்ள வேற்று மொழி கற்று வெளிநாடு சென்று பொருளீட்டுகின்றனர்.

4) வேலை காரணமாக ஒரு குடும்பம் மற்ற மொழி தேசத்திற்கு இடம் பெயர்தலால் மொழியில் கலப்பு ஏற்படுகிறது.

5) உலகமயமாக்கல் காரணமாக Net. Web இதன் மூலம் உலகெங்கிலும் உற்றுநோக்க அந்நிய மொழி அறியும் ஆர்வத்தில் கலப்பு ஏற்படுகிறது.

*மொழி ஆசிரியர்க்கு ஆளுமைப்பண்பு அவசியம் இக்கூற்றிற்கான காரணங்கள்*

ஆளுமைப்பண்புகள் தேவை என்னும் போது தமிழாசிரியருக்கு மொழிப்புலமை சொல்லாக்கத்திறன், பிறமொழிப்புலமை இப்பண்புகளும் மொழியாசிரியருக்கு இருக்க வேண்டியது அவசியம். உளநூல் புலமை அவசியம் இருந்தால்தான், மாணவர்களை கையாள முடியும். மேலும் திறமையாக பேசும் திறன் எழுதும் திறன் இவையும் தமிழாசிரியருக்கு தேவை. பாடம் நடதும்போது எடுத்துக்கூறும் ஆற்றல் தேவை. அப்போதுதான் விளக்கத்திற்கு சரியான உதாரணம்

கொடுத்து கற்றால் கற்பித்த சிறப்பு பெரும். எனவே பல்வேறு கோணங்களில் தமிழாசிரியர்க்கு ஆளுமைப்பண்புடன் விளங்கினால்தான் சிறப்பாக அமையும்.

*சமூகவியல் அடிப்படையில் மொழிகற்றல்*

சமூகம் என்பது படித்த மாணவர்கள் சமுதாய மக்களிடம் இருந்து அன்றாட நிகழ்வுகளோடு இயைபு உடையதாக அமையும். ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்தார் பேசும் வழக்கு வட்டார வழக்கு, உறவுமுறையில் மாற்றம், பல்வேறு ஜாதி மக்களின் வேறுபாட்டில் மொழியின் மாற்றம், சமூகப் பின்னணியில் மொழியில் பல்வேறு மாறுபாடு காணமுடிகிறது. உறவில் தாய்வழி உறவினர்கட்கு (வழிபிறந்து) வேறு பெயர்கள், தந்தை வழிபிறந்த உறவினர்கட்கு வேறு பெயர்கள் என மாமா ஆங்கிலத்தில் ஒரே வார்த்தைதான். ஒவ்வொரு இனப்பிரிவுகளும் அவர்கட்கு ஏற்ற தொழிலுக்கு ஏற்ற பல்வேறு சொற்களை உருவாகும். பால் வேறுபாட்டினாலும் மொழி வேறுபாடு அடைகிறது. அமைச்சர். விதவை போன்ற சொற்கட்கு எதிர்பால் அமையவில்லை, மொழியும் இயற்கைச் சுழலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை. எஸ்கிமோ மக்கள் அவ்வழிச்சுழலில் ஏற்ப சொல்வளம் மிகும். இவ்வாறு மொழி சமூக அடிப்படையில் பல்வேறு மாற்றத்தை தரும் என்பது திண்ணம்.

*பணியிடைப்பயிற்சியின் அவசயிம்*

ஆசிரியர்கள் பண்ணெடுங்காலமாக பணியாற்றி வருகின்றனர். அவர்கட்கு அப்போதைய அறிவு மட்டுமே இருக்கும். அதனை தற்கால சூழலுக்கு ஏற்றவாறு தன்னை தகுதி மேம்படுத்திக் கொள்ள இந்த பணியிடை பயிற்சி தேவைப்படுகிறது. உதாரணமாக OHP, CD Player, நெட், வெப், இவற்றை இயக்க இந்த பணியிடை பயிற்சி தேவைபடுகிறது. மேலும் மாணவர்களினி தற்கால சூழல் பெற்றோர்களின் நிலைப்பாடு, அரசாங்கத்தின் புதிய கொள்கைகள் இவற்றை அறிய இந்த பணியிடைப் பயிற்சி அவசயிம் தேவைப்படுகிறது.

*தமிழில் பாடம் தொடங்குதல் முறைகள்*

தமிழ் பாடம் தொடங்குதல் திறனால் தொடங்குதல் முறை என்பது அதன் உட்கூறுகளில் ஒன்று. (இறுதியான ஒன்று) அவை

1) புதிய பாடத்துடன் ஒப்புமையுடைய கருத்துக்களை கூறி தொடங்குதல்.
2) வினாக்கள் கேட்டு வினாக்களை வரவழைத்து தொடங்குதல்.
3) விளக்குதல் வர்ணித்தல் சொற்பொழிவுகள் மூலம் தொடங்குதல்.
4) கதை கூறித் தொடங்குதல்.
5) நடித்தல் மூலம் தொடங்குதல்.
6) துணைக் கருவிகளை பயன்படுத்தித் தொடங்குதல்.
7) செய்து காட்டல் மூலம் தொடங்குதல் எனப் பாடத்தலைப்புக்கு ஏற்றவாறு நல்லதொரு முறையினை தொடங்குதல் சிறப்புடையதாகும். வேறுயேதேனும் தொடங்கு முறையிருப்பினும் நன்று எனக் கூறுகிறார்.

*மாற்றொலி எண்*

ஒரு மொழியில் உள்ள எல்லா (உறுப்புகட்கும்) ஒலிகட்கும் வரி வடிவு கொடுக்க இயலாது.

ஒலியெண்களுக்கு மட்டும் குறியீடுகள் கொடுத்து எழுதுவது எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் உச்சரிக்க வேண்டிய முறையையும் தெளிவுபடுத்தும். மொழியை செம்மையாக பயன்படுத்த வேண்டுமென்றால் ஒலி எண்களின் மாற்றொலிகளை செம்மையாக உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு ஒலி எண்களுக்கும் தனித்தனி எழுத்துக்கள் வேண்டும். எழுத்துமுறை செம்மைப்பட்டால் உச்சரிப்பில் இடர்பாடு தோன்றாது.

உதாரணம் : தமிழில் காணப்படும் க் க ங மூன்று மாற்றொலிகளைக் K, H, G எனவரும் பக்கம் தாக்கம் தங்கம் என மாற்றொலி பெறுகிறது.

## Unit 3

*மொழியாசிரியரின் பண்புநலன்கள்*

*முன்னுரை :*

மொழியாசிரியரின் பண்பு நலன்கள் எண்ணற்றன. அவை மொழிப்பற்று, இலக்கணப் புலமை, எடுத்துக்கூறும் ஆற்றல், குரலி ஏற்றத்தாழ்வு திறமையாக எழுதும் திறன், உள்ளங்களை ஒன்றாக்கி இணைத்தல், உளநூல் வள்ளுனர் கலையார்வம், தவறுகளை திருத்தும் பண்புகள், பயிற்றலில் அடிப்படை விதிகளை தெரிந்தவராயிறுத்தல், நகைச்சுவை நாட்டம், என பல்வேறு

பண்புகளை தன்னகத்தே கொண்டவராயின் மொழியாசிரியர் என கூறுதல் சிறப்பாகும். அவற்றை ஒவ்வொன்றாக காண்போமாக.

*மொழிப்பற்று :*

தாய்மொழி பற்றுடன் தான் இருப்பது மட்டுமல்லாது தன் மாணவர்கட்கும் மொழிப்பற்றினை உண்டாக்கும் வண்ணம் கற்பித்தல் நடைபெற வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தமிழ் பற்றுடன் பாடம் கவனிக்கச் செய்வது சிறப்பாகும்.

*இலக்கணப்புலமை :*

ஒவ்வொரு மொழியாசிரியரும் இலக்க இலக்கிய புலமையுடன் விளங்கவேண்டும். ஐந்திலக்கணம் நடைமுறையிலக்கணமாக முறையே கற்றுத் தெளிந்திருத்தல் அவசியமாகும். இவ்விலக்கணத்தை எளிமையாக இனிமையாக கற்பிக்கும் திறனை பெற்றிருப்பது அதைவிட அவசியமாகும்.

*குரலில் ஏற்றத்தாழ்வு :*

ஒவ்வொரு செய்யுள் உறைநடை நடத்தும்போது வார்த்தைகட்கு ஏற்ப குரலில் ஏற்றத்தாழ்வு இருக்கவேண்டும். இது மாணவருக்கு அதிகம் கவனம் ஏற்படுத்தும். வார்த்தையின் பொருளுக்கு ஏற்ப அதனை குரலில் ஏற்றம் இறக்கம் அமைதல் வேண்டும்.

*ஒருங்கிணைத்தல் :*

பாடம் நடத்தும்போது மாணவர்களின் உள்ளங்கள் யாவும் ஆசிரியர் நடத்தும் பாடத்தினை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும். அந்த அளவிற்கு ஈடுபாட்டுடன் தமிழைக் கற்பிக்க வேண்டும் என்றே கூறுவர்.

*உளநூல் வள்ளுநர் :*

மாணவர்கள் மனநிலை உணர்வதற்கு ஆசிரியர் உளவியல் நன்கு அறிந்தவராயிருத்தல் மிக மிக அவசியம். அதனால் மாணவரின் மனநிலை புரிந்து கொண்டு பாடம் நடத்துவதே சிறப்பு ஏனெனில் கிட்டதட்ட இருபது நிமிடங்கள் கவனிக்கத் தோன்றும் பிறகு மாணவர்கட்கு உற்சாகமான செய்திகளைச் சொல்லி மீண்டும் பாடம் பற்றி அறிதல், மாணவனின் உளத்தன்மை அறிந்து பாடம் கற்பிக்க உளநூல் புலமை தேவை.

*கலையார்வம் மிக்கவர் :*

கலை ஆர்வமிக்கவராயிருத்தல் மிக மிக அவசியம் ஏனெனில் மொழி என்பது கற்பனை, வர்ணனை, உதாரணங்கள், அணிகலன்கள், கதைகள் என அனைத்தும் கலந்ததாகவே இருக்கும். எனவே ஆயகலைகளில் பல இங்கு இருக்கும். அதற்கான ரசனை ஆசிரியருக்கு இருந்தால்தான் மாணவர்கட்கு ரசனையுடன் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நிகழும்.

*பருவமறிந்து பயிற்றும் பண்பு :*

மாணவர்களின் பருவம் அறிந்து எட்டாம் நிலை, பத்தாவது, பன்னிரெண்டாம் வகுப்பு என அதன் நிலைக்கேற்றவாறு கற்றல் கற்பித்தல் நிகழ வேண்டும். மாணவர் ஒவ்வொரு நிலையிலும் பருவ மாறுபாடு ஏற்படுகிறது. அதன் நிலைக்கு ஏற்ப பயிற்றும் பண்பினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

*பயிற்றலில் அடிப்படை விதிகள் :*

பயிற்றலில் உளவியலார் கருத்துப்படி அடிப்படை விரிகள் உள்ளன. அதனை நன்கு அறிந்து கொண்டு அதனடிப்படையில் தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு செல்லுதல், எளியவற்றிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்லுதல் அண்மையிலிருந்து சேய்மைக்குச் செல்லுதல், கருத்துப்பொருளிலிருந்து காட்சிப்பொருளுக்குச் செல்லுதல் என்ற விதிகட்கு உட்பட்டு கற்பித்தால் சிறந்தது என்பது கல்வியியலார் கருத்து.

*நல்லொழுக்கம் :*

எத்துணைதான் கற்பித்தல் சிறப்பாக இருந்தாலும் ஒழுக்கம் முதலில் நன்றாக அமைய வேண்டும். அதற்கு ஆசிரியர் ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டும் அதை பார்த்து மாணவர்கள் செயல்படுவர். நிறைய ஒழுக்க நெறிகதைகள், இலக்கியங்களை கற்பித்தல் மூலமாக நல்லொழுக்கம் மாணவர்கட்கு தேவை.

*முடிவுரை :*

மேற்கண்டவாறு அனைத்து பண்புகளும் மொழியாசிரியருக்கு இருப்பது அவசியம் அப்போதுதான் மாணவர்கள் மொழியறிவை மேம்படுத்த முடியும் எனவே மொழியாசிரியருக்கு அனைத்து பண்புகளும் அமைந்திருக்க வேண்டும்.

*குறையறி சோதனை*

(அ) குறைகளை தீர்க்க தரப்படும் பயிற்சிகள்

*திட்டமிட்டு கற்றலை அதன் வகைகள்*புதிய தேவைகள் புதிய நிலமைகளுக்கேற்ப அவ்வப்போது கல்வியில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பெறும் விளைவை உடனடியாக ஏற்படுத்தக் கூடிய மாறுதல்களை புரட்சி என்பர் கல்வியிலி அவ்வாறு நான்கு புரட்சிகள் ஏற்பட்டுள்ளதாக எரிக் ஆஷ்பி என்பார்.

1) கல்விக்கென பள்ளிகள் எனப்படும் தனிச் சமூக அமைப்புகள் ஏற்பட்டமை முதல் புரட்சி. இதனால் இளந்தலைமுறையினது கல்விக்கான பொறுப்பு பெற்றோர்களிடமிருந்து ஆசிரியர்கட்கு பெருமளவு மாற்றப்பட்டது.

2) கல்வியில் வாய்மொழியுடன் எழுத்தும் வகுப்பறையில் இடம்பெற்றது இரண்டாவது புரட்சியாகும்.

3) அச்சுக்கலையும், அச்சடிக்கப்பட்ட பாடநூல்களும் மூன்றாம்புரட்சியை ஏற்படுத்தியது.

4) மின்னனுவியலின் உதவியால் வியக்கத்தக்க வளர்ச்சியில் பல்வேறு கருவிகளும் நுண்முறைகளும் கல்வியில் பெறும் மாற்றத்தை ஏற்படுத்தின இதுவே நான்காம் புரட்சியாகும்.

இவ்வாறு தோன்றிய நுண்முறைகளுள் ஒன்றே திட்டமிட்டு கற்றலாகும். இதையே திட்டமிட்டு தானே கற்றல் என்பது பொருத்தமாகும். திட்டமிட்டு தானே கற்றல் என்பது ஆசிரியர் வகுப்பிலிருந்தும் கற்பித்தலினின்று வேறுபட்டது. இக்கற்றலின் இலக்குகள் (கற்றல்) வரையறுக்கப்பட்டுள்ளன. அவ்விலக்குகளுக்கு ஏற்பப் பாடப் பொருள் அமைக்கப்படுகிறது. இவ்வாறு கற்றலில் மாணவர்கள் முழுமையாக சிந்தித்து செயல்படுவதால் முழுமையான கற்றல் நடைபெறுகிறது. இம்முறையை செயல்படுத்த கற்பிக்கும் பொறிகளும் திட்டமிட்டதை தானே கற்றல் நூல்களும் உதவுகின்றன.

<u>*தானே கற்றலின் வகைகள் :*</u>

திட்டமிட்டு கற்றலின் முக்கியமான மூன்று வகைகளை அறிந்து கொள்வோம்.

1) நேர்வழித் திட்டம்.
2) இடையீடு நேர்வழித் திட்டம்.
3) கிளை வழி திட்டம் எனப்படும்.

<u>*1) நேர்வழித் திட்டம் :*</u>

இந்நேர்வழித் திட்டத்தை நீள்முறை பாட அமைப்பு என்றும் கூறுவர். இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள பாட பொருள், பகுதிகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு சிறிய பாடப்பகுதியாக இருக்கும். சிறுசிறு பகுதியாக மாணவர்கள் முன்னேற வாய்ப்பளிப்பதற்காகவும் இருக்கும். சரியான விடையை மாணவர் உணரும் வகையில், ஒவ்வொரு சிறு பகுதியிலும் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். இதில் மாணவர்கள் தவறின்றி புரிந்துகொள்ளமுடியும். நேர்வழித் திட்டமானது கீழ் உள்ள முறையில் அமையும்.

1) தூண்டல் (அ) சிறு அளவிலான பாடச் செய்தி

2) துலங்கல் (ஆ) அப்பாடச் செய்தியை ஒட்டியவினா தருவதற்கான இடைவெளி – ஒரிரு சொற்றொடர்களில்

3) ஊடகக் குறிப்பு – இப்பகுதி சில சட்டங்களில் அமையும் , சிலவற்றில் அமையாது.

சட்டம் – 2

1) சட்டம் ஒன்றின் சரியான விடை
2) செய்தி
3) வினா
4) விடை
5) ஊடகக்குறிப்பு

<u>*இடையீட்டு நேர்வழித் திட்டம் :*</u>

இத்திட்டமும் நேர்வழித் திட்டத்தின் போக்கிலேயே அமையும். இதில் சட்டங்கள் சிலவற்றிற்கு மாணவர்கள் விடை தந்தபின், சில சோதனை வினாக்கள் தரப்படும் இவ்வினாக்களுக்கு மாணவர்கள் சரியான விடை தந்தால் அடுத்துவரும் சில சட்டங்கட்கு மாணவர்கள் விடைத் தரத்தேவையில்லை. குறிப்பிட்ட வேறுபகுதியிலிருந்து தந்தால் போதும். இவ்வாறு சில சட்டங்கள் விடுவதால் குறிப்பிட்ட மாணவர்களுக்கு காலம் மிச்சமாகும். வேகமாகச் செயல்படவும் முடியும்.

<u>*கிளைவழித் திட்டம் :*</u>

இம்முறையில் சட்டமானது பாடச்செய்தி சற்று அதிகம் உள்ளதாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களை உள்ளதாகவும் அமைந்திருக்கும். இப்பகுதியின் இறுதியில் பல்விடையில் தேர்ந்தெடுக்கும் அமைப்பில் வினா அமையும். மாணவர்கள் சரியான விடையை குறிப்பிட்டால் தொடர்ச்சியாக அடுத்த அடுத்த சட்டட்தத்திற்கு செல்லலாம். தவறான விடையை குறிப்பிட்டால் அதை திருத்திக் கொள்வதற்கான சட்டத்திற்கு செல்லவும் அங்குள்ள செய்திகளில் இருந்து தவற்றை

உணர்ந்து மறுபடியும் மூல சட்டத்திற்கு வந்து மீண்டும் விடை தரல் வேண்டும். திருத்தச் சட்டத்தில் தவறு நிகழ்ந்தற்கான காரணம் விளக்கப்படும். படித்த பாடச் செய்திக்கு மேலும் பல விளக்கங்கள் எடுத்துக் காட்டுகள் அமைந்திருக்கும். இம்முறையில் அனைத்து மாணவர்களும் ஒரேமுறையில் சட்டங்கள் வழியே பயில்வார்கள் என்று சொல்ல முடியாது. கற்கும் பாட நிலை (மாணவர்களின் தொடக்க) பாடப்பொருள் அறிவு வேறுபட்டு காணப்படும்போது கிளைவழிதிட்டத்தின் மூலம் பயிற்றுவித்தல் நல்லது அத்துடன் நிறைய மூலச்சட்டங்கள் தயாரித்தல் தேவையில்லை. என்ற முறையிலும் இம்முறையைக் கையாளலாம்.

இதுவே தானே கற்றலும் அதன் வகைகளின் விளக்கங்களும் ஆகும்.

---

## ***Unit 4***

*நுண்ணலை பயிற்சி*

ஏதேனும் ஒரு சிறு தலைப்பில் ஒரே கருத்து, திறன் சில மணித்துளிகள் (5–7 நிமிடங்கள்) 5, 6 மாணவர்கட்கு மட்டும் கற்பிக்கும் நிகழ்வு நுண்ணிலைக் கற்பித்தல் எனப்படும்.

*குறையறி சோதனை*

வகுப்பிலுள்ள எல்லா மாணவர்கட்கும் ஒரே மதிப்பெண்களை தேர்வில் பெறுவதில்லை இதற்கு காரணம் மாணவர்கள் சிலர் எளிதில் புரிந்து கொள்கின்றனர். மாணவர்கள் சிலர் கற்றுக் கொள்வதில் சிலருக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால் அவாக்ள் பெறும் மதிப்பெண்களில் வேறுபாடுகள் தெரிகின்றன. மதிப்பெண்கள் குறைவதற்கு பல காரணங்கள் இருக்கலாம் அதை ஆசிரியர்கள் குறைபாடுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை கண்டறிய வேண்டும். இதற்காக தயாரிக்கப்படும் சோதனை குறையறி சோதனைகள் குறையறி சோதனை எனப்படும்.

*தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை எழுது*

தமிழில் ஆங்கலிம், வடமொழி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகள் கலந்துள்ளன.

சைக்கிள், புஷ்பம், தாராளம், ஜலம், கேட்டு, பெஞ்ச், ஜமக்காளம், அரிசி போன்றன பிறமொழி சொற்கள் ஆகும்.

*எழுத்துத் தமிழில் காணப்படும் பிழைகள்* எழுத்துத் தமிழில் காணப்படும் பிழைகள் சந்திப்பிழை, குறில் நெடில் பிழைகள், மேலும் ற,ர,ண,ன,ந மயக்கம் ள,வ,ழ மயக்கம் போன்ற பிழைகள் ஏற்படுகின்றன.

*சுருக்கி வரைதலின் பயிற்சியின் பயன்கள்*

1) சுருக்கி வரைதல் என்ற திறனை கற்கின்றனர்.
2) பெரிய அளவில் உள்ளதை சிறிய அளவிலே சுருக்கி தேவையான போது பார்த்துக்கொள்ள முடியும்.
3) தேர்வு நேரத்தில் கைகொடுக்கும் சுருக்கக் குறிப்பு.
4) கருத்தினை சுருக்குவதால் காலம் (குறைவாக) உதவும்.

*ஆரம்ப நிலைக்குறிய தமிழ் பாடத்திட்டத்தைக் கூறுக*

மணலிலோ, கரும்பலகையிலோ கோடு வட்டம் கோளம் என கிறுக்கி பழகி குழந்தைக்கு எழுத்துக்களையும் சொற்களையும் தெரிந்துகொண்ட பின்னர் அதை பார்த்து எழுதும் பயிற்சியும், கேட்டு எழுதும் பயிற்சியும் தரவேண்டும்.

*இலக்கியத் திறனாய்வு* இலக்கியத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒப்பிடுதல், புதிதாக அதில் கண்டுபிடித்தல், வகைபாடு செய்தல் என ஏதாவது ஒன்றை ஒரு முறையில் ஆய்வு செய்வது இலக்கியத் திறனாய்வு எனப்படும்

*செயல் தொடர் ஆராய்சியின் பயன்கள்* ஆராய்ச்சியில் பல்வேறு தொடர் ஆராய்க்சிகள் நடைபெறுகின்றன. அதாவது ஒரே செய்தியை பல்வேறு ஆராய்க்சியாளர்கள் அடுத்தடுத்து செய்கின்றனர். அதுமற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு பயன்படுகிறது. மேலும் இவ்வாய்ச்சி முக்கிய நுனுக்கமான செய்திகளை பகுத்துப்பார்க்க உதவுகிறது.

*தமிழ் கற்றலில் கணினியின் பங்கு*

தமிழ்மொழி கற்றுக்கொடுக்க, தமிழ் கற்றல்முறை கணினியில் செயல்படுகிறது. ஒரு செய்தியை பாடத்தை கணிப்பொறியில் தட்டச்சு செய்து சி.டி. வடிவமாக மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க உதவும். இது காட்சி கேள்விக் கருவியாக அமையும்

## Unit 5

*அலகுத் திட்டம்*அலகு என்பது ஒரு பாடப்புத்தகம் பல அலகுகளைக் கொண்டது. அதில் ஒரு அலகிற்கு எத்தனை கற்பித்தல் பாட அளவு தேவை (நேரம்) என்பதனை வரையறுத்தல் அலகுதிட்டம் என கூறுவர்.

*மேற்பார்வை படிப்பின் இன்றியமையாமையை குறிப்பிடுக?*

1) குறித்த காலத்தில் குறித்த பகுதியை கற்றுமுடிக்க முடியும் பயிற்சி கிடைக்கிறது.

2) மாணாக்கர் தாமே கற்பதால் அவர்கட்கு தன்னம்பிக்கை வளர்கிறது.

3) சிறந்த படிப்பு பழக்கமும் படிக்கும் திறனும் வளரும் வாய்புகள் உள்ளன.

4) கற்றலில் மாணவர் பங்கு அதிகமாகும்.

5) புதுக்கற்றலில் மாணவர் முழுமையாக ஈடுபட வாய்ப்பு உள்ளது. தேவையெனின் ஆசிரியர் துணை தேவை.

6) இம்முறை தனி மாணாக்கர் வேற்றுமைக்கு ஏற்ற முறை மெதுவாக கற்போறுக்கும் விரைவாக கற்போறுக்கும் உதவும் வண்ணம் அமைந்துள்ளது.

*பேச்சுத் தமிழில் காணப்படும் குறைகள் குறிப்பிடுக.*

1) கொச்சையாக பேசுதல் முதல் பிழையாகும்.

2) மரியாதை சொல் இன்றி பேசுதல் தவறாகும்.

3) வாய் தடுமாற்றம் மிகவும் நீக்கப்பட வேண்டியது.

4) எளிமையாக பேசத் தெரியாதது குறைபடும்.

5) விரைவாகப் பேசுதல் தவறாகும்

6) மிகவும் நிதானமாக பேசுதலும் தவறாகும்

7) முன்னுக்கு பின் முரணாக பேசுதலும் தவறாகும்.

8) சொல், பொருள் மயக்கம் தோன்ற பேசுதல்

9) மற்றவர்கட்கு எரிச்சலூட்டும் வண்ணம் பேசுதல்

10) சிலவார்த்தைகளை விழுங்கிவிட்டு பேசுதல்

11) தூய மொழி பேசாதிருத்தல்

12) அன்னிய மொழி கலந்து பேசுதல்

இவைகள் யாவும் குறைகள் ஆகும்.

*தமிழ் கற்பித்தலில் துணைக்கருவிகளின் பங்களிப்பு குறித்து எழுது*

1) மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்க இவை பெரிதும் உதவுகின்றன.

2) கருத்துப்பொருள்களைக் காட்சிப் பொருளாக மாற்றுவதால் அவை கற்றலை எளிதாக்குகின்றது.

3) கற்றலில் வேகத்தை தருவதால் கற்றலுக்கான காலத்தை குறைக்கின்றது.

4) கற்றலை நிணைவை மிகுதியாக்கி மறத்தலைக் குறைக்கின்றன.

5) பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்தி கற்றலில் கவர்ச்சியையும் கவனத்தையும் உண்டாக்குகின்றன.

6) சுவையற்ற பாடத்தையும் சுவையுடையதாக்கிக் கற்பிக்க இவை உதவுகின்றன.

*கல்வி ஏற்பாட்டை அமைப்பதற்கான கோட்பாடுகள்* கல்வி ஏற்பாடு என்பது மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில தேவையான பள்ளி கட்டிடம் வகுப்பறைகள், கரும்பலகை, காற்றோட்டம், பாடத்திட்டம் போன்ற எண்ணற்ற அடிப்படைகள் அனைத்தும் தேவைப்படுகிறது. மாணவனுடைய கல்வி தரம் உயரவேண்டும். மாணவனுடைய மனநிலை அறிந்து அவர்கட்கு ஏற்ற கல்விப் பொருளை அமைத்துக் கொடுத்து நல்ல சூழலில் நல்லதோர் கல்வி அமையுமாறு ஆக்குதலே கல்வி ஏற்பாட்டிற்கான கோட்பாடுகள் ஆகும்.

*பாடக்குறிப்பு எழுதுவதன் பயன்கள்*

1) பாடக்குறிப்புகள் எழுதுவதால் நாம் பாடக்கருத்துக்களை அறிந்துகொள்ள பயன்படுகிறது.

2) முன்கூட்டியே தயாரித்தலால் பல்வேறு புத்தகங்களை பார்த்து சரியான விடைகளை தயார் செய்ய முடியும்.

3) மாணவர்கட்கு என்ன புதுத் தகவல்களை தரவேண்டும் என்று முன்கூட்டியே யோசிக்க முடிகிறது.

4) மாணவர்கட்கு வரும் சந்தேகங்களை ஊகித்து அதற்கும் தயாரித்துக்கொள்ள முடிகிறது.

5) மாணவர்கட்கு குறிப்பிட்ட குறிப்புகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் நடத்தி முடிக்க முடிகிறது.

6) மாணவர்கட்கும் தெளிவான கற்றல் கற்பித்தல் நிகழ்கிறது.

*மொழியாசிரியருக்கும் பணியிடை பயிற்சி தேவையா*

ஆசிரியர்கள் பண்ணெடுங்காலமாக பணியாற்றி வருகின்றனர். அவர்கட்கு அப்போதைய அறிவு மட்டுமே இருக்கும். அதனை தற்கால சூழலுக்கு ஏற்றவாறு தன்னை தகுதி மேம்படுத்திக் கொள்ள இந்த பணியிடை பயிற்சி தேவைப்படுகிறது. உதாரணமாக OHP, CD Player, நெட், வெப், இவற்றை இயக்க இந்த பணியிடை பயிற்சி தேவைபடுகிறது. மேலும் மாணவர்களினி தற்கால சூழல் பெற்றோர்களின் நிலைப்பாடு, அரசாங்கத்தின் புதிய கொள்கைகள் இவற்றை அறிய இந்த பணியிடைப் பயிற்சி அவசயிம் தேவைப்படுகிறது.

## Unit 6

*மொழியாசிரியர் பண்புகள்*

மொழியாசிரியர் மொழியியல் அறிவு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணமும் அதன் தோற்றம் வளர்ச்சியும் செயல்பாடுகளும் அறிந்திருக்க வேண்டும். மொழி என்ற எழுத்துக்களின் தோற்றம், பிறப்பு, முயற்சி, சொல்லின் தோற்றம் அதன் பல்வேறு பண்புகள் மற்றும் வளர்ச்சி பொருள் அகம் புறம் என அனைத்தும் யாப்பு, புதிதாக நூல்

இயக்கும் இயல்பு அணி அழகு சேர்க்கும். படிப்பினை இப்படி இலக்கண இலக்கிய புலமை யாவும், மொழியியல், எனப்படும் இது மொழியாசிரியர் அவசியம் தேவைப்படுகிறது. அப்போதுதான் சிறப்பாக இருக்கும்.

*திட்டமிட்டு கற்றலின்படி நிலைகளை குறிப்பிடு*

திட்டமிட்டு கற்றலின் முக்கியமான மூன்று வகைகளை அறிந்து கொள்வோம்.

3) நேர்வழித் திட்டம்.
4) இடையீடு நேர்வழித் திட்டம்.
3) கிளை வழி திட்டம் எனப்படும்.

*1) நேர்வழித் திட்டம் :*

இந்நேர்வழித் திட்டத்தை நீள்முறை பாட அமைப்பு என்றும் கூறுவர். இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள பாட பொருள், பகுதிகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு சிறிய பாடப்பகுதியாக இருக்கும். சிறுசிறு பகுதியாக மாணவர்கள் முன்னேற வாய்ப்பளிப்பதற்காகவும் இருக்கும். சரியான விடையை மாணவர் உணரும் வகையில், ஒவ்வொரு சிறு பகுதியிலும் குறிப்புகள் கொடுக்கப்படிருக்கும். இதில் மாணவர்கள் தவறின்றி புரிந்துகொள்ளமுடியும். நேர்வழித் திட்டமானது கீழ் உள்ள முறையில் அமையும்.

1) தூண்டல் (அ) சிறு அளவிலான பாடச் செய்தி

2) துலங்கல் (ஆ) அப்பாடச் செய்தியை ஒட்டியவினா தருவதற்கான இடைவெளி – ஒரிரு சொற்றொடர்களில்

3) ஊடகக் குறிப்பு – இப்பகுதி சில சட்டங்களில் அமையும் , சிலவற்றில் அமையாது.

சட்டம் – 2

1) சட்டம் ஒன்றின் சரியான விடை
2) செய்தி
3) வினா
4) விடை
5) ஊடகக்குறிப்பு

*இடையீட்டு நேர்வழித் திட்டம் :*

இத்திட்டமும் நேர்வழித் திட்டத்தின் போக்கிலேயே அமையும். இதில் சட்டங்கள் சிலவற்றிற்கு மாணவர்கள் விடை தந்தபின், சில சோதனை வினாக்கள் தரப்படும் இவ்வினாக்களுக்கு மாணவர்கள் சரியான விடை தந்தால் அடுத்துவரும் சில சட்டங்கட்கு மாணவர்கள் விடைத் தரத்தேவையில்லை. குறிப்பிட்ட வேறுபகுதியிலிருந்து தந்தால் போதும். இவ்வாறு சில சட்டங்கள் விடுவதால் குறிப்பிட்ட மாணவர்களுக்கு காலம் மிச்சமாகும். வேகமாகச் செயல்படவும் முடியும்.

*கிளைவழித் திட்டம் :*

இம்முறையில் சட்டமானது பாடச்செய்தி சற்று அதிகம் உள்ளதாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களை உள்ளதாகவும் அமைந்திருக்கும். இப்பகுதியின் இறுதியில் பல்விடையில் தேர்ந்தெடுக்கும் அமைப்பில் வினா அமையும். மாணவர்கள் சரியான விடையை குறிப்பிட்டால் தொடர்ச்சியாக அடுத்த அடுத்த சட்டட்ததிற்கு செல்லலாம். தவறான விடையை குறிப்பிட்டால் அதை திருத்திக் கொள்வதற்கான சட்டத்திற்கு செல்லவும் அங்குள்ள செய்திகளில் இருந்து தவற்றை உணர்ந்து மறுபடியும் மூல சட்டத்திற்கு வந்து மீண்டும் விடை தரல் வேண்டும். திருத்தச் சட்டத்தில் தவறு நிகழ்ந்தற்கான காரணம் விளக்கப்படும். படித்த பாடச் செய்திக்கு மேலும் பல விளக்கங்கள் எடுத்துக் காட்டுகள் அமைந்திருக்கும். இம்முறையில் அனைத்து மாணவர்களும் ஒரேமுறையில் சட்டங்கள் வழியே பயில்வார்கள் என்று சொல்ல முடியாது. கற்கும் பாட நிலை (மாணவர்களின் தொடக்க) பாடப்பொருள் அறிவு வேறுபட்டு காணப்படும்போது கிளைவழிதிட்டத்தின் மூலம் பயிற்றுவித்தல் நல்லது அத்துடன் நிறைய மூலச்சட்டங்கள் தயாரித்தல் தேவையில்லை. என்ற முறையிலும் இம்முறையைக் கையாளலாம்.

இதுவே தானே கற்றலும் அதன் வகைகளின் விளக்கங்களும் ஆகும்.

*தமிழில் ஐவகை பாடங்களுக்கும் பயன்படுத்தப்படும் துணைக்கருவிகளை<u>முன்னுரை :</u>*

தமிழில் ஐவகை பாடங்களாக செய்யுள் உரைநடை இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை என்று எடுத்துக்கொள்ளலாம். இப்பாடங்களை நடத்தும்போது ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்றவாறு துணைக் கருவிகளை பயன்படுத்துவது எனினும் குறிப்பிட்ட தலைப்பு பாடப் பொருள் அதற்கு

ஏற்றவாறு அமைத்தலே சிறப்பு நாம் இதுக்கு இந்த துணைக்கருவிதான் உபயோகப்படுத்த வேண்டும். என்பது இல்லை. எனினும் வினாவிற்கு விடையளிக்கும் நோக்குடன் முடிந்தவரை துணைக்கருவிகளை அமைத்து பிரித்து தருகிறேன் மேலும் துணைக் கருவிகள் சார்ட் (வெள்ளைக் கலர்) அட்டைகளை காணமுடிகிறது. அவை கவிததை, இலக்கணம் முக்கியமான பகுதிகளை எழுதிக் காட்டவும் படங்கள் வரையவும் வரைந்த படத்தை ஒட்டவும் பயன்படுகிறது. மேலும் தர்மாக்கோல் பொருள், மரச்சட்டதால் ஆன பொருள்கள் என பல்வேறு துணைக்கருவிகளைக் கூறலாம்.

*செய்யுள் :*

செய்யுளில் திருக்குறள் பாடம் நடத்துவோம் எனின் அதற்காக திருவள்ளுவர் உருவ பொம்மை, திருவள்ளுவர் படம் ஒட்டிய சார்ட், திருக்குறள் எழுதப்பட்ட சார்ட், ஓலைச்சுவடி போன்று குறளில் கூறப்பட்ட செய்திகட்கு ஏற்றார்போல் இனிய உளவாக இன்னாது கூறல் கனியிருப்ப காய் கவர்ந்தற்று என்ற குறளுக்கு கனி, கய, இரண்டையும் துணைக்கருவிகளாக கருதலாம்.

*உரைநடை :*

உரைநடைப்பாடம் நடத்தும் போது காமராசர் பாடம் (அ) மூலிகைச் செடிகள் பயன்பாடு என்று இருந்தால் அதற்கு ஏற்றார் போல பல்வேறு மூலிகைச் செடிகளை நேரில் பார்த்து மூலப்பொருளாக காண்பித்து அதனுடைய பயன்பாடு குறித்தும் தீமை குறித்து வகுப்பு நடத்தலாம். அதற்கான வண்ண அட்டை உபயோகப்படுத்தலாம்.

*இலக்கணம் :*

இலக்கணம் பாடம் நடத்தும் முன்பு, அந்த இலக்கண வரையரைகட்கு ஏற்றார்போல திட்டம் உள்ள கட்டிடம் புத்தகம் என நமது வரையறைக்குட்பட்டது போன்று கோபுரம், படிகட்டுகள், பூ இதழ்கள் என அருமையான துணைக்கருவிகளும் உபயோகிக்கலாம். சிறப்பாக பாடம் கற்பிக்க முடியும்.

*துணைப்பாடம் கற்பித்தல் :*

துணைப்பாடம் கற்பிக்கும் போது கதைகட்கு ஏற்றவாறு உருவப்படங்கள், தர்மாக்கோல் அமைந்தால் சிறப்பாக அமையும். அதை தேவையான வடிவில் உருவாக்கலாம். அவ்வாறு ஆக்கும் வடிவத்திற்கு வண்ணம் தீட்டலாம். கிடைக்கும் படங்களை வண்ண அட்டையில் ஒட்டி காட்டலாம்.

*கட்டுரை கற்பிக்கும் முறை :*

கட்டுரையின் கருக்கு ஏற்ற பொம்மை கதைப்படங்கள் ஒட்டிய அட்டை ஏதேனும் விளையாட்டு பொம்மைகள் என யாவும் கட்டுரையை விளக்கவல்லன அவ்வாறு கற்பிக்கலாம்.

*முடிவுரை :*

மேற்கண்டவாறு ஐ வகை பாடங்கட்கும் பல்வேறு துணைப்பாடங்களை கற்பித்தல் சிறப்பாக அமையும்.

## Unit 7

*கட்டுரை வகைகளை எழுதி ஆரம்பநிலை கட்டுரையை வகையினை விவரி*

*முன்னுரை :*

கட்டுரை என்பது மிகப் பொருள் பொதிந்த ஒரு கருவியாக அமையும் ஒன்றினை பற்றி முழுமையாக அமையும் வண்ணம் வரைதலே கட்டுரை எனலாம். மேலும் கட்டுரை என்பது படிப்போரை கவரும் வண்ணம் சிந்தனை தூண்டும் வண்ணம் அமைய வேண்டும்.

*வகைகள் :*

படக்கட்டுரை, கதைக் கட்டுரை சிந்தனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, விவாதக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, கற்பனை (அ) பாணிப்புக் கட்டுரை, ஆய்வுக்கட்டுரை, உரையாடல் கட்டுரை என கட்டுரை வகைகள் பலவாராக உள்ளன. அதில் தொடக்க நிலைக்கட்டுரை என்பது ஒன்று முதல் ஐந்து வரை உள்ள மாணவர்கட்கு நடத்தப்படும் கட்டுரையாகும் அவை. படக்கட்டுரை, வரலாற்றுக்கட்டுரை ஆகியவைதான் சிறப்பாக இருக்கும்.

*படக்கட்டுரை :*

மிகப்பெரிய கதை பகுதியை தேர்ந்தெடுத்து அதற்கு ஏற்றவாறு படங்களை தேர்ந்தெடுத்து முறையாக ஒட்டிவைத்து கதையை சொல்லச் சொல்வது பின்னர் கதை தொடர்ச்சியை எழுதச் சொல்வது இவ்விதமாக படங்கள் கதை கூறுவனவாக அமையாமல் ஒரு நிகழ்ச்சியை குறிப்பதாகவும் அமையலாம். ரயில்நிலையக்காட்சி, வீடு நெருப்பு பிடித்து எரிதலும் மக்கள் முயற்சித்து அனைத்தலும் தீயணைப்புத்துறை வீரர்கள் செயல்பட்டு அனைத்தலும், மழைவெள்ளக்காட்சி போன்ற காட்சிகளை படமாக்க ஒட்டி பார்த்தால் கட்டுரையாக அமையும். மாணவர் தம் கற்பனையில் நிகழ்வுகளை எண்ணிப்பாராது நேரடியாக ஒரு காட்சியை பார்த்தால் அது குறித்து எழுதுவது எளிதாகிறது.

*கதைக் கட்டுரை :*

தொடக்க நிலையில் கதை கேட்டலும் எழுதுதலும் மாணவர்கட்கு எளிதாக விருப்பம் உடையதாக அமைகிறது. எனவே சுவைமிக்க கதைகளைக் கூறி அவற்றை எழுதச் சொல்லலாம். முதலில் கதையை சுருக்கமாகச் சொல்லலாம். பின் கதை தொடர்களைச் சொல்லலாம். அதை மாணவர் அறிவர். ஆதலால் அவர்கள் எளிதில் கதை எழுதுவர். இரண்டாம் நிலையாக கதை முழுவதும் கூறாமல் இன்றியமையாது தேவைப்படும் சொற்களாக குறிப்புகளைக் கூறி பின்னர் அதை கதையாக தொடுக்க வேண்டும். இதன் மூலம் கதையை வளர்க்க முடியும் என்று மாணவர்கள் அறிந்து கொள்வர். மேலும் பத்தி பிரிக்கும் வகை அறிய பயிற்சியும் பெறுவர்.

*வரலாற்றுக்கட்டுரை :*

கல்வியை விரியடையச் செய்து வரலாறு, அதனை தனி மனித வரலாறு, நாட்டு வரலாறு, சமுதாய வரலாறு, நாகரீக வரலாறு, தன் வரலாறு, என பல்வேறு வகை செய்யலாம். இவ்வரலாற்று கட்டுரையை எழுதுவதனால் நாட்டு, மொழி, தலைவன் மேலும் சுய வரலாற்றினை அறிய முடிகிறது. ஒருவரது வாழ்க்கையை பிறர் எழுதுவது வாழ்க்கை வரலாறு தம் வாழ்வை தாமே எழுதுவது தன்வரலாறு என இருவகையாக பிரிப்பர். தொடக்க நிலை மாணவர்கட்கு தன்வரலாற்று கட்டுரை எழுதச் சொல்வது சிறப்பு தரும்.

உதாரணம் : வாழைமரம் தன்வரலாறு கூறுதல், தென்னை மரம் தன் வரலாறு கூறுதல், கடல்நீர் தன்வரலாறு கூறுதல் என நிறைய தன் வரலாற்றுக் கட்டுரைகளை எழுதச் சொல்லும்போது தனக்குத்தானே செய்திகளை வளர்க்கத் தெரிகிறது.

*முடிவுரை :*

இவ்வாறு தொடக்க நிலை மாணவர்கட்கு தேவையான பயிற்சி கட்டுரை வழியே தந்து திறன்களை மேம்படுத்தலாம் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது

*மொழி கற்றலுக்கு மொழி பயிற்றாய்வுக் கூடத்தின் பங்கினை எழுது*

*அ) மீளச் செய்தல் :*

மொழி சில வரையறுக்குட்பட்ட பகுதியில் முறைகளில் அமைகிறது. எனவே கேட்க போலச் செய்தல், ஒலிக்க, மீண்டும் ஒலிக்க, பிழைகள் உணர, திருத்த ஒப்பிட பயிற்றாய்வுக் கூடம் உதவுகிறது.

*ஆ) பாடப்பகுதிகள் தேர்ந்தெடுத்தல் :*

பதிவு செய்யப்பட்ட மொழி பயிற்சி நாடாக்கல் இங்கு உள்ளதால் பயிற்சியாளர் எப்பகுதியில் சிறப்பு கவனம் தேவை என உணர்கிறாறோ அப்பதிவிற்கான பதிவுகளைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி பெற வாய்ப்புண்டு.

*இ) சுயவேகம் :*

மொழிப் பயிற்சிகளில் கற்பவர்கள் தங்கள் வேகத்திற்கு ஏற்பச் செயல்படலாம். பிறர் குறிக்கீடு இதில் இல்லை.

*ஈ) திருத்தம் பெறுதல் :*

பயிற்சி பெறும்போது பயிற்சியாளர்களிடம் குறைகள் காணப்படின் கருவறையின் மூலம் ஆசிரியர் திருத்தம் தருவார். தனிப்பட்ட முறையில் திருத்தம் பெறுவதால் செம்மை செய்து கொள்ள அருமையான வாய்ப்பு கிடைக்கிறது.

*முடிவுரை :*

பிற மொழியிலும் கற்றவர்களும் இவ்வாய்வுக்கூடங்கள் தாய்மொழி கற்பித்தலிலும் துணைபுரியலாம். ஒவ்வொரு தாய்மொழியும் பிறருக்கு அந்நிய மொழியாம். எனவே கற்பித்தலில் தொடக்கநிலை நடுநிலை மாணக்கர்கட்கு ஒலித்தல் பயிற்சிகள் தரலாம். தாய்மொழியில் ஒலித்தற்கரிய ஒலிகள் உள்ளன. அவற்றில் வாய் மொழிப் பயிற்சி தர இக்கூடம் பயன்படும். கேட்டல் பயிற்சி தர மொழிபயிற்சி ஆகியவற்றிலும் அந்த நிலைகளுக்கு ஏற் தாய்மொழியில் மாணவர்கட்கு பயிற்சி தரலாம்.

சிறந்தபேச்சுகள் செய்யுளை படிக்கும் விதங்கள், சுவையான பகுதியை படிக்கும்விதங்கள் ஆகியவற்றில் இப்புலனாய்வுக் கூடங்கள் தாய் மொழி பாடத்தில் சிறப்பாக பங்கு பெறுகின்றன.

*மொழியின் சமுகப் பணிகள் விளக்கு.*

நாட்டை வளப்படுத்துவதில் மொழி முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. மொழியின்றேல் சமூகம் வளர்ச்சிபெற முடியாது. சமுதாய வளர்ச்சிக்கு மொழி நான்கு விதங்களில் உதவ வேண்டும்.

1. சமூகத்தின் பண்டைய மரபுகள் சிதைந்து அழியாமல் காத்து அவற்றைப் புதுத்தலைமுறையினரிடம் ஒப்படைத்தல் வேண்டும். சமூக மரபினை மாணாக்கர்களுக்கு அளிக்கும் ஆசிரியர் தாமே அம்மரபுகளைத் திறம்பட உணர்ந்திருத்தல் இன்றியமையாதது. சமூக மரபில் அடங்கியுள்ள இலக்கியங்களின் அறிவு, கலைகளின் எழில் அம்மரபின் வரலாறு, அடிப்படைக் கருத்துக்கள், வாழ்க்கை மதிப்புகள் ஆகியன பற்றி ஆசிரியர் ஓரளவேனும் தெளிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

2. சமூகப் பழக்க வழக்கங்களில் காலத்திற்கேற்ற மாறுதல்களைச் செய்வதும் கல்வியின் செயல்பாடுகளுள் ஒன்றாம். மொழியானது சமூக மாற்றத்துக்கான ஒரு கருவியாகும். சமூகத்ன் அமைப்பு, நியதிகள், தேவைகள் ஆகியவற்றில் காலப் போக்கில் மாற்றங்கள் மாறி மாறி எழுகின்றன என்றும் சமூகம் சிறிதுகாலம் ஒரு திசையில் தீவிர நிலைக்குச் செல்லும் என்றும் அடுத்து இவை இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இயங்கத் தொடங்கும் என்றும் கூறுகின்றனர்.

   தற்போது மாணாக்கர்கள் நம் நாட்டில் தீண்டாமை ஒழிப்பு, கூட்டுறவு மனப்பான்மை, மக்கள் தொகைக் கட்டுப்பாடு முதலிய பல புதுக்கருத்துக்களில் மனஞ்செலுத்திப் பரப்புதல் வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் இளமையிலேயே மாணாக்கர் மனத்தில் இவற்றைப் பதிய வைக்க வேண்டும். இப்புதுக் கருத்துகளை ஆசிரியர்கள், தாம் கற்பித்தல் மூலமாகவும் மற்றும் தங்களுடைய நடத்தையின் உதாரணத்தாலும் மாணாக்கர்களிடம் பரப்பலாம்.

3. சமுதாய நலனைத் தங்கள் தனி நலனுக்கு மேம்பட்டதாகக் கருதி வளர்த்தல் வேண்டும். பிறர் நலம் பேணும் பண்பே முக்கியமானது. சமூகம் விதிக்கும் சில கட்டுத் திட்டங்களை மதித்து ஒழுக வேண்டும். கல்வியின் வாயிலாக மாணாக்கர்களைச் சமூக நியதிக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்ய வேண்டும. மொழி, சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுச் செயல்படுவதிலுள்ள நன்மைகளைக் காரணங்காட்டி, மாணாக்கரை ஒழுங்குபடுத்த முயல்கிறது. கருத்தேற்றம், பின்பற்றல் அல்லது பார்த்துச் செய்தல் போன்றவை மூலம் மாணாக்கர்களின் சமூக நடத்தையைச் செப்பனிட இது முயல்கிறது.

4. சமூக முன்னேற்றத்திலும், நாட்டை வளப்படுத்தும் திட்டங்களிலும் நாட்டு மக்களின் அறியாமையைப் போக்கும் பணிகளிலும் பங்கு கொள்வது அவசியம். பள்ளியானது சமூதாயத்தின் அறிவு மையமாகத் திகழ்தல் வேண்டும். உடல் நலம் பேணல், ஓய்வு நேரச் செயல்களுக்கு வாய்ப்பளித்தல், வீட்டு வசதிகளைப் பெருக்குதல், பொருளாதா முன்னேற்றம், எல்லோருக்கும் வேறுபாடுகளின்றி வாழ்க்கையில் முன்னேறச் சம வாய்ப்புகள், வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் நிம்மதியாக வாழ வசதி ஆகியன யாவும் இத்தகைய கூறுகளாகும்.

-------

## ***Unit 8***

*மொழி*

மொழியிருப்பதால் ஒருவரின் தேவையை மற்றவர்க்கு புரிய வைக்கிறோம். கருத்து பரிமாற்றம் தொடர்புகொள்ள எளிமையாக துணைபுரிவது மொழி.

*மொழி இலக்கியம்* மொழிகள் வளர்ச்சி பெற்ற பின் இயல், இசை, நாடகம், கவிதை இதிகாசங்கள் என பல்வேறு வகையிலே ஆக்கப்படுவது மொழி இலக்கியம் எனப்படும்.

*தமிழ் மொழியின் அமைப்பை* தமிழ் மொழி அடிப்படையில் ஒலி வடிவத்தையும் பின்னர் வரி வடிவத்தையும் பெற்றது. இவை பேச்சு மொழி, எழுத்துமொழி என இருபிரிவுகளாக இருக்கிறது. இன்று விரிவான இலக்கண இலக்கிய அமைப்பைக் கொண்டது.

*நடைமுறை இலக்கணம்*

தமிழில் இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என ஐந்து வகைப்படும். இவை முறையாக கற்றுத் தரப்படுவது. நடைமுறை இலக்கணம் எனப்படும். அதாவது முதலில் எழுத்து பற்றியும். பின்னர் சொல் பற்றியும் விரிவாக அறிந்து கொண்டு பிறகு அகப்பொருள் புறப்பொருள் பற்றி பிறகு யாப்பு, அணி என முறையாக கற்றல் கற்பித்தல் நடைமுறை இலக்கணம் எனப்படும்.

*கலந்தாய்தல் முறை*

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கருத்தைபற்றி குறிப்பிட்ட மாணவர்கள் கலந்து சிந்தித்து பேசுதல் பின்னர் சரியான முடிவு அளித்தல் என்பது கலந்தாய்வு எனப்படும்.

*மொழி கற்பித்தலில் வானொலியின் பங்கு* வானொலி வழிக் கல்வியை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் போன்றன கல்வியை கற்பிக்க ஏதுவாகின்றது. செய்யுள் விளக்கங்கள், சொற்பொழிவுகள் போன்றன மொழி கற்பித்தலுக்கு உதவுகின்றன.

*தமிழ் கற்பித்தலில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள்* தமிழ் கற்பித்தலில் பல்வேறு வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம். உதாரணமாக 1) நுண்கருவிகள் பற்றிய ஆய்வு, 2) துணைக் கருவிகள் பற்றிய ஆய்வு, 3) பாடத்திட்டம் பற்றிய ஆய்வு, ஆசிரியர் தரம் வளர்த்தல் பற்றி எனப்பலவாகும்.

*புறவய வினாக்களுக்கு 4 சான்று*

1) கோடிட்ட இடங்களை நிரப்புக.

2) ஓர் வார்த்தையில் பொருள் தருக?

3) பொருத்துக. தேவாரம் – மருந்து பற்றி
திரிகடுகம் – பக்தி பற்றி

4) சரியா / தவறா : தமிழ் மொழி மிகவும் தொன்மையானது சரியா / தவறா

*வினைத் தொகை*

காலம் மறைந்து பெயர் எஞ்சி நின்றால் வினைத் தொகை எனப்படும்.

*தமிழ் வழிக்கற்றலில் படைப்பாற்றல் வளருமா*

தமிழ் வழி கற்பித்தலில் கதை, கவிதை, நாடகம், சிறுகதை இவ்வகையான படைப்பாற்றல் வளர்கிறது காரணம். தாய்மொழி எளிதில் புரியும் ஆர்வம் மிகும். புதியன ஆக்கவேண்டும் என்ற சிந்தனை எழும்.

*மாணவர்களிடம் இலக்கிய சுவையுணர்வு ஆற்றலை வளர்க்க எத்தகைய கற்பித்தல் முறைகளை கையால்வாய்*

நடிப்புமுறை தமிழ் இலக்கிய நாடகம் உரைநடை நாடகம் ஆகியவைகள் நாடக முறைகளை நடிப்பு முறையில் கற்பித்தல் மாணவர்கட்கு எளிதில் புரியும்.

*நிறைகள் :*

1) தாங்களே நடிப்பதனால் உற்சாகமாக தங்களுக்குரிய பகுதிகளை மனனம் செய்வார்கள்.
2) நடிப்பு முறையில் அதிக கவனம் இருக்கும்
3) சிறந்த கவர்ச்சி, அதிக கவனத்தை தரும்.
4) கதை போன்றவை எளிதில் புரிய வைக்கலாம்.

நிறைகள் போலவே குறைகளும் காணலாம்.

*குறைகள் :*

1) அனைத்து பாடத்தையும் நடிப்பு முறையில் கற்பிக்க இயலாது.
2) காலம் அதிகம் செலவாகும்.
3) பொருளாதாரம் அதிகம் செலவாகும்.
4) அனைத்து பாடங்களையும் இந்த நடிப்பு முறையில் கற்பிக்க இயலாது.
5) குறிப்பிட்ட சில மாணவர்கள் நடிக்க பிற மாணவர்கள் தங்களுக்கு வாய்ப்பு இல்லை என வருந்துவர். எனவே நடிப்பு முறை குறிப்பிட்ட அளவு பயன்படும்.

*தமிழில் செய்யுள் கற்பித்தலுக்கும் உரைநடை கற்பித்தலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?*

| | செய்யுள் | உரைநடை |
|---|---|---|
| 1. | செய்யுள் சிறும் தலையும் அடியும் கொண்டது. | இதரற்கு அவ்வாறு உறுப்புகள் கிடையாது. |
| 2. | ஒலி நயம் கொண்டது. சந்த நயம் ஏதுகை மோனை. | சந்த நயம் கிடையாது. அடுக்கு மொழி சொற்கள் உண்டு. |
| 3. | கற்பனை நிறைய காணப்படும். கவிதையில் | உரைநடையில் கற்பனை சிறக்காது. |
| 4. | உணர்ச்சிகள் அழகும் மிளிரும். | கருத்துக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படும். |
| 5. | வர்ணனைகள் அணிகள் இடம் பெரும். | அனைத்தும் சொற்கள் வளமாக அமைக்கப்படும். |
| 6. | எதுகை நயம் மோனை நயம் செய்யுள் அமையும். | அடுக்குத் தொடர், மொழி அமையப் பெறும். |
| 7. | பொருள் சுவை நிறைந்ததாக காணப்படும். | கருத்து நிறைந்ததாக அமையும். |

*கட்டுரை எழுதுவதில் மாணவர்கள் செய்யும் பிழைகளைப் பட்டியலிடுக*

1) தலைப்பு துணை தலைப்பை சரியான இடத்தில் அமைக்கமாட்டார்கள்.
2) பத்தி தொடங்கும் முறை முடிக்கும் முறையில் பிழை ஏற்படும்.
3) ஆச்சர்யம், கமா, வினா, போன்ற குறியீடுகளை சரிவர குறிக்க மாட்டார்கள்.
4) எழுத்துப்பிழை, சொல்பிழை, தொடர்பிழை, மரபுப்பிழை ஏற்பட வாய்ப்பு உண்டு.
5) முறையாக எழுதும் திறனில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.
6) தரம் உயர்வான (சொற்கள்) அமைப்பில் எழுதுவதில்லை.
7) பிறமொழி கலத்தல் ஏற்படும்.
8) சந்திப்பிழை ஏற்படும்.

*துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களைக் குறிப்பிடுக.*

*1) படிப்பில் ஆர்வமூட்டல் :*

துணைப்பாட நூல்களில் இடம் பெற்றுள்ள கதைக்ள, வரலாறுகள் ஆகியவற்றில் சிறு சிறு பகுதிகளைக் கூறிப் பிறவற்றை மாணாக்கரே படித்து அறியும்படி ஆர்வத்தைத் தூண்டலாம்.

*2) பல்துறை அறிவினைப் பெறுதல் :*

கல்வி கரையில என்னும் தொடருக்கேற்ப நாள்தோறும் பலவிதமான அறிவியல் நூல்களும், கதை நூல்குளம், உலகச் செய்திகள் பற்றிய நூல்களும் தேர்ந்தெடுத்து தொகுத்து எளிமையாக்கித் துணைப்பாட நூல்களாக அமைக்கலாம்.

*3) தன்னம்பிக்கை வளர்த்தல் :*

ஆர்வத்துடன் நூல்களைப் படிப்பதாலும், பல்துறை நூல்களைப் படித்து அறிவு பெறுவதாலும், பலரது வாழ்க்கை வரலாறுகளைத் தாமே படித்துச் செய்தி அறிவதாலும் மாணாக்கர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்கின்றது.

*4) வாய்க்குள் படிக்கும் திறன் வளர்த்தல் :*

தொடக்க நிலையில் மாணவர் எழுத்துகளைப் பார்த்து ஒலித்துப் படிக்கக் கற்றுக் கொள்கின்றனர்.

*5) விரைவாகப் படிக்கும் திறன் வளர்த்தல் :*

துணைப்பாட நூலை வகுப்பில் கற்பிக்கும் பொழுது மாணாக்கர் வாய்க்குள் படிக்கின்றனர்.

*6) மொழியறிவு வளர்த்தல் :*

மாணாக்கர் துணைப்பாட நூல்களில் புதிய கதைகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் அறிவியல் கண்டுபிடிப்புப் போன்ற பிற செய்திகளையும் படிக்கின்றனர். அவ்வப் பகுதிகளில் புதிய சொற்கள் பல இடம் பெறலாம். அவற்றை இடம் நோக்கிப் பொருள் அறிந்து மேலே படிக்கின்றனர். அல்லது அகராதி பார்த்துப் பொருளறிகின்றனர். ஆசிரியரைக் கேட்டு அறிகின்றனர். இதனால் அவர்களது சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. மொழியறிவு வளர்கின்றது. இவ்வாறு மொழியறிவு வளர்த்தல் துணைப்பாட நூலின் ஒரு நோக்கமாகும்.

*தமிழ் கற்பித்தலை எவ்வாறு மதிப்பீடு செய்யலாம்*

*உற்றுநோக்கல் முறை :*

உற்றுநோக்கல் எனப்படுவது பிறரது நடத்தையினை நேரடியாகவும், கவனத்தோடும் நோக்கி இவ்வாறு நோக்குதல் வழியே பெறப்பட்ட விவரங்களை முறைப்படி ஆராய்ந்து முடிவுகள் பெறுதலைக் குறிக்கும். வாழ்க்கைத் துணுக்குமுறை, குறிப்பிடு பட்டியல் போன்ற பிறமுறைகளுக்கும் உற்று நோக்கல் அடிப்படையாக அமைகிறது.

உற்றுநோக்கல், நடத்தையினை முழுமையாகப் பொதுவாக ஆராய்வதற்கோ, நடத்தையின் ஒரு கூறினை மட்டும் தேர்ந்தெடுத்து ஆராய்வதற்கோ பயன்படுத்தலாம். இவ்வாறு உற்றுநோக்கப்படும் கூறுகள் சிரித்தல் போன்ற எளிய கூறுகளாகவோ, ஒத்துழைப்பு போன்ற சிக்கலான கூறுகளாகவோ இருக்கக் கூடும். மாணவர் பெற்றுள்ள சமூகப் பொருத்தப்பாடு, மனவெழுச்சியின் முதிர்ச்சி நிலை போன்றவற்றை மதிப்பீடுதலிலும் உற்றுநோக்கல் முறை பயனுள்ள முறையாகும்.

உற்றுநோக்கல் மூவகைப்படும். அவை 1) உற்று நோக்கப்படுவோன் முழுச்சுதந்திரத்தோடு இயங்கும் நிலை 2) உற்று நோக்கப்படுவோன் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கும் நிலை 3) அவன் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு இயங்கும் நிலை ஆகியனவாம்.

உற்று நோக்கப்பட்ட முடிவுகள் நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டுமானால் உற்று நோக்கிய சூழ்நிலைகளை மீண்டும், மீண்டும் அமைத்து உற்று நோக்கிப் பல விவரங்களைச் சேகரித்து, அவற்றில் நம்பகத்தன்மை உடையவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளலாம் அல்லது உற்றுநோக்கும் நிகழ்ச்சிளைப் பலர் உற்றுநோக்கச் செய்து உற்று நோக்கிய முடிவுகளைக் கொண்டு நம்பகத்தன்மை உள்ளனவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பொதுவாக உற்று நோக்கப்பட்ட முடிவுகளைக் கொண்டு மாணவர்களை நன்று – சுமார் – மோசம் என்ற வகைப்படுத்திக் கூறலாம். இவ்வாறே அவர்கள் திறமையுள்ளவர்கள், திறமையற்றவர்கள் என்றும் கூற இயலும்.

*கட்டுரை வகை தேர்வின் நன்மை தீமைகள்*

இதில் தொகுத்து அறியும் திறன், புரிந்து கொள்ளும் திறன் போன்றவை அளக்கப்படுகின்றன. ஒரு வினாவிற்கு நீளமான விடைகள் பத்தி பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். ஒரு பெரிய தலைப்பின் கீழ் சிறு சிறுதலைப்புகளும் விரிவாக்கப்படும். வயதுநிலைக்கேற்ப விடை எழுதும் அளவு மாறுபடும். எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ள வினாக்கள் அடங்கும். கருத்துக்களைக் கோர்வையாக அமைக்கும் திறன், விமர்சனம் செய்யும் திறன், விளக்கம் கொடுக்கும் திறன் போன்றவற்றை அறிய உதவுகின்றது. இங்குள்ள வினாவிற்கு விடை எழுத நிறைப்படிக்க வேண்டும். கற்பனை வளத்தைப் பெருக்கவும், படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவும் பயன்படுகிறது. மொழிவளம் இதனால் கூடுகிறது. மொழித்திறனைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது. தகவல்களைச் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தும் பழக்கம் ஏற்படுகிறது. மாணவர்களுடைய குறைகளை ஓரளவு அறிந்து கொள்ளலாம். வினாக்கள் தயாரிப்பது எளிதாக உள்ளது.

இம்முறையில் சில குறைகள் உள்ளன. மாணவர்களின் விடையை மதிப்பீடு செய்வதில் நம்பகத்தன்மை இருப்பதில்லை. ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்பு, மதிப்பெண் தருவதில் குறுக்கிட வாய்ப்பில்லை.

வினாத்தாளில் குறைந்த எண்ணிக்கையுள்ள கட்டுரை வினாக்கள் இடம் பெறுவதால் பாடத்திட்டத்தில் உள்ள அனைத்துப் பாடங்களிலும் வினாக்கள் தரமுடியாது. ஆகவே மாணவர்கள் ஒரு சில பாடங்களைப் படிக்காமல் ஒதுக்க வாய்ப்புண்டு.

சில சமயங்களில் மாணவர்கள் மனப்பாடம் செய்து எழுதவும் வாய்ப்புண்டு.

திட்டமிட்டு கற்றலில் இலக்கணத்தை எங்ஙனம் கற்பிப்பாய்?

*தானே கற்றலின் வகைகள் :*

திட்டமிட்டு கற்றலின் முக்கியமான மூன்று வகைகளை அறிந்து கொள்வோம்.

5) நேர்வழித் திட்டம்.
6) இடையீடு நேர்வழித் திட்டம்.
3) கிளை வழி திட்டம் எனப்படும்.

*1) நேர்வழித் திட்டம் :*

இந்நேர்வழித் திட்டத்தை நீள்முறை பாட அமைப்பு என்றும் கூறுவர். இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள பாட பொருள், பகுதிகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு சிறிய பாடப்பகுதியாக இருக்கும். சிறுசிறு பகுதியாக மாணவர்கள் முன்னேற வாய்ப்பளிப்பதற்காகவும் இருக்கும். சரியான விடையை மாணவர் உணரும் வகையில், ஒவ்வொரு சிறு பகுதியிலும் குறிப்புகள் கொடுக்கப்படடிருக்கும். இதில் மாணவர்கள் தவறின்றி புரிந்துகொள்ளமுடியும். நேர்வழித் திட்டமானது கீழ் உள்ள முறையில் அமையும்.

1) தூண்டல் (அ) சிறு அளவிலான பாடச் செய்தி

2) துலங்கல் (ஆ) அப்பாடச் செய்தியை ஒட்டியவினா தருவதற்கான இடைவெளி – ஓரிரு சொற்றொடர்களில்

3) ஊடகக் குறிப்பு – இப்பகுதி சில சட்டங்களில் அமையும் , சிலவற்றில் அமையாது.

சட்டம் – 2

1) சட்டம் ஒன்றின் சரியான விடை
2) செய்தி
3) வினா
4) விடை
5) ஊடகக்குறிப்பு

*இடையீட்டு நேர்வழித் திட்டம் :*

இத்திட்டமும் நேர்வழித் திட்டத்தின் போக்கிலேயே அமையும். இதில் சட்டங்கள் சிலவற்றிற்கு மாணவர்கள் விடை தந்தபின், சில சோதனை வினாக்கள் தரப்படும் இவ்வினாக்களுக்கு மாணவர்கள் சரியான விடை தந்தால் அடுத்துவரும் சில சட்டங்கட்கு மாணவர்கள் விடைத் தரத்தேவையில்லை. குறிப்பிட்ட வேறுபகுதியிலிருந்து தந்தால் போதும். இவ்வாறு சில சட்டங்கள் விடுவதால் குறிப்பிட்ட மாணவர்களுக்கு காலம் மிச்சமாகும். வேகமாகச் செயல்படவும் முடியும்.

செய்யுள் மனப்பாடம் செய்தலின் நன்மை தீமைகளைத் தருக.

*நிறைகள் :*

1) பலதரப்பட்ட மாணவர்களுக்கு ஒரே மாதிரியான கற்பித்தல் நடைபெறுகிறது.
2) காலம் வீணாகாமல் போன்று அமைகிறது விரைவாக (முடிக்கும் மாணவர்கள்)
3) ஒப்படைப்புகள் தயாரித்தல் ஆசிரியருக்கு எளிதாகின்றது.
4) கற்பித்தல் பாடத்திட்டம் தயாரித்தல் எளிது.

*குறைகள் :*

1) குறைகள் எனப்படும்போது மாணவர்கள் திறன்கட்கு ஏற்ற வகையில் கற்பித்தல் நிகழாது.

2) ஆசிரியர் தயாரித்தல், ஒரே மாதிரியாக அமையும்.
3) கூட்டம் அதிகமாக இருப்பதால் கவனமின்மை ஏற்படும் மாணவர் / ஆசிரியருக்கும்.
4) மாணவர்கட்கு கற்றல் நிறைவு ஏற்படாது (அனைத்து)

Unit 9

தமிழ் கற்பித்தலின் நான்கு புதிய உத்திகள்.

தமிழ்மொழி கற்பித்தலில் புதிய முறைகளாக நாம் கருதுவது நடிப்புமுறை, விளையாட்டுமுறை, செயல்திட்டமுறை, ஆய்வுக்களமுறை, கணினிவழி காட்சிக் கேள்விமுறை என தற்போது மிக்க பயன்பாடுடைய முறையில் கற்பித்தல் எளிதாகின்றது. இனிமையாகின்றது.

மாணக்கர்களை மையமாக கொண்டு அமையம் தற்போதைய கல்வி கொள்கை பல்வேறு புதிய கோணங்களில் கற்பிக்க துணை செய்வனவாக அமையும். அவை.

*விளைாட்டுமுறை :*

விளையாட்டு முறைப்படி தமிழ் கற்பிக்க 1 முதல் 5 வரை மிக சிறப்பாக அமையும். விளையாடும் போதே நிறைய கருத்துக்களை புரிந்து கொள்ளும் வகையில் தொடக்க நிலை, நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்கட்கு பெரிதும் பயன்படும்.

1) படங்களையும் பெயர்களையும் பொருத்துதல்
2) பொருள்களைப் பார்த்து பெயர் எழுதச் சொல்லுதல்
3) பொது எழுத்தோடு சேர்த்து படித்தல்.
4) மாறியுள்ள எழுத்துக்களை பொருள் அமைய மாற்றி அமைத்தல்.
5) எழுத்துக் கூட்டல் விளையாட்டு.

*நடுநிலைப் பள்ளி மாணவர்கட்கு :*

1) இரட்டைக் கொம்பு சேர்த்து சொல்லாக்குதல்.
2) சொற்களை முறைமாறி கொடுத்து வாக்கிமாக ஆக்குதல்.
3) எதிர்ச்சொல், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல்
4) அன்னியனைக் கண்டுபிடித்தல், வேறுபடுத்துதல்.
5) படம் ஒன்றைக்காட்டி ஏற்ற தலைப்பு தரச் சொல்லுதல்.
6) கதை அமைத்தல் , ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல்.
7) விடுகதைகள் அமைத்து பதில் பெறுதல்.

இவ்வாறாக தொடக்க நிலை, இடைநிலை பள்ளி மாணவர்கட்கு விளையாட்டு முறையில் மொழியை கற்றுக் கொடுக்கலாம்.

*நடிப்பு முறை :*

நடிப்பு முறை என்பது இடைநிலை உயர்ந்த மாணவர்களை ஏற்ற பாடத்திற்கு நாடகமாக பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல் நல்ல கற்றலை தரும். கற்பனை குழந்தைகட்கு ஏற்பட்டு தானும் நடித்து பலவற்றைக் கற்றுக் கொள்ளும். உதாரணமாக மரக்கட்டை, ரயில்வண்டியாக, நாற்காலியாக, கப்பலாக, சிறுவனோ, பால்காரன், கடைக்காரர் என்று நடிப்பதில் பேரார்வம் காட்டுவார்கள். அவ்வகையில் உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு தேவையான பாடத்தை நடிப்பு முறையில் நடத்திக் கற்றுக் கொடுக்கலாம்.

*செயல்திட்டமுறை :*

மாணவர்கள் தற்போது செயல்திட்ட முறையில் படிக்கிறார்கள். S.S.A. திட்டம் அவ்வாறு மாணவர்கட்கு சிறப்பாக செயல்படுகிறது. இஃது மாணவர்களை தன் சுய விருப்பப்படி செயல்பட மனம் விழைகிறது. இதனால் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெற இந்த முறை உதவுகிறது. மேலும் இதில் ஆர்வம் அதிகமாகிறது. சிறுசிறு திட்டம் நிறைவேறும் போது மனதில் உற்சாகம் எழும் இது மேலும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தை தூண்டுகிறது. இது சிறந்த கற்றல் முறை.

*ஆய்வுக் கள முறை :*

இஃது கற்றலை அதன் இடத்திலே சென்று நேரடியாக (களம்) செயல்களை அறிதல், கோயில் கலை, வரலாறு, சுற்றுலாத் தளங்கள், நூல் நிலையம், ரயில் நிலையம், தபால் நிலையம், இப்படி பல்வேறு பொது விபரங்களை அறிந்து கொள்வது சிறந்த ஒரு கற்றலாகவும் மொழிபாடத்திற்கு அமைகிறது.

*கணினி முறை (காட்சிக் கேள்வி) :*

கணினி முறையில் பாடப்பகுதியில் உருவாக்கி திரையில் வீழ்த்தி காட்சிக் கேள்வி வகுப்பை நடத்துதல் மிகச் சிறந்த மாணவர்கட்கு மிக சிறந்த கவனத்தை தரவல்லதாக அமைகிறது.

தேவையானபோது மீண்டும் நாம் உபயோகித்து பார்க்கலாம். இதில் பாடப்பகுதி அனைத்தும் விரிவாக வடிவமைக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை தற்போது விரிவடைந்து விரிச்சுவல் டீச்சிங் என்ற அளவிலே மேலும் விரிவடைந்துள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதில் பல்வேறு சிறந்த புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. இவையாவும் சிறந்த புரிதலையும் அதிக கவனம் ஆர்வத்தையும் தருகிறது.

*<u>நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் :</u>*

*<u>நிறைகள் :</u>*

1) மனித இயல்புக்கு இம்முறை பொருத்தமாக உள்ளது. ஆதி மனிதனும் வளரும் இளம் குழந்தைகளும் பல நிலைகளில் ஒத்த இயல்புடையவர்கள் என்பது தெளிவு. அவ்வாதி மனிதனும் இன்றைய குழந்தைகளும் கற்பதும் கையாளுவதும் சொற்களே அன்றி எழுத்துக்கள் அல்ல. அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, பாட்டி போன்ற சொற்களைத்தான் இளங்குழவிகள் கூறுகின்றனர். சொற்கள் திருந்திய வடிவமாக இல்லாமல் கொச்சையாக மழலைக் கிளவிகளாக இருக்கக்கூடும். எனினும் குழந்தைகளின் பேச்சு வடிவம் சொல்லே அன்றி, எழுத்து அன்று. எனவே, இச்சொல் முறை மனித இயல்புக்கு ஒத்ததாக உள்ளது.

2) ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்னிப் பொருள் உண்டு. தனித்து இருக்கும்பொழுது எப்பொருளையும் உணர்த்தாத எழுத்துக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சொல்லாக உருவினைப் பெறுங்கால் தனியே அச்சொல்லுக்கென ஒரு பொருளும் உண்டாகின்றது. எனவே, பொருள் அற்ற எழுத்தைவிடப் பொருள் நிறைந்த சொற்களைக் கற்பிப்பது சாலவும் நன்று. பொருள் புரியும் முழுச் சொல் இன்பமும் கவர்ச்சியும் பயப்பதாகும்.

3) முழுமையினின்று பாகங்களுக்குச் செல்வது உளவியல் முறை. எனவே, சொல்லிலிருந்து எழுத்துக்குச் செல்வது இயல்பானது. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போகின்றோம்.

4) முழுச் சொற்களின் வடிவையும், ஒலிப்பையும் அறிவதுடன் மாணவர்கள் பொருளையும் தெரிந்து கொள்கின்றனர்.

*<u>குறைகள் :</u>*

1) எழுத்துக் கூட்டிப்படிக்க வாய்ப்பில்லாத காரணத்தால் கற்ற எழுத்துக்களைக் கொண்ட புதுச் சொற்களைப் படிப்பதும், படித்தவற்றைப் பார்க்காமல் எழுதுவதும பிழை நிறைந்ததாக ஆகிவிடக் கூடும்.

மீண்டும் மீண்டும் சொற்களை எழுதும் பயிற்சி அளிப்பின், இக்குறையினை நீக்கக்கூடும்.

2) நேர் ஒலிப்பு முறையுள்ள தமிழைவிடத் தனி ஒலிப்பு முறை கொண்ட ஆங்கிலம் போன்ற வேறு மொழிகட்கே சொல்முறை சாலச் சிறந்தது. எழுத்துக்கூட்டும் அறிவு பெறின், ஆசிரியர் துணையின்றி மாணவர் தாமே கற்க இயலும். புதிய கல்வித் திட்டத்தில் மாணவர் தன்னோக்க முயற்சியையும் தன்னம்பிக்கையையும் வளர்க்க வேண்டுமாதலின் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆசிரியர் துணை நாடல் நலமன்று.

எனினும், சொல்லைப் பிரித்து அதன் எழுத்துக்களைக் கற்பித்தால், இக்குறையினை நீக்கக்கூடும்.

3) படங்களின் துணை கொண்டு கற்பிக்கப்படுவதால் மாணவர் சொற்களைப் பாராமலே, மனப்பாடமாகப் பொருள் உணராது விரைவாகச் சொல்லிக்கொண்டே செல்லலாம். ஒரு படத்தை

மூடிக் கொண்டு எழுத்துக்களை மட்டும் பட உதவியின்றிப் படிக்கச் சொன்னால் படிக்க முடியாமல் வாளாவிருக்கலாம்.

இதற்குப் பரிகாரமாக ஒவ்வொரு சொல்லிலும் மூன்று மின் அட்டைகள் தயாரித்துப் பயிற்சி அளித்தால் (Flash Card) இக்குறை நீங்கும். 1) அதாவது படமும் சொல்லும் அட்டை ஒன்று 2) படம் மட்டும் கொண்ட அட்டை ஒன்று. 3) படம் இல்லாத சொல் மட்டும் தனித்து உள்ள அட்டை ஒன்று ஆக மூன்று வகை மின் அட்டைகள் தேவைப்படும்.

4) தமிழ் மொழியின் நெடுங்கணக்கு வரிசையறிவு மாணவர்கட்கு இல்லாமல் போகக்கூடும்.

இது ஒரு குறையே எனினும் நாளடைவில் மாணவர் போதிய தேர்ச்சி பெற்று மேல் வகுப்புக்குச் செல்லுங்கால் இக்குறை தானே நீங்கும்.

*நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் :*

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க
பகை யாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க
அடையாத துன்பங்கள் அவை வந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க
இரவாமை அறம் என்னும் தமிழ்நாடு வாழ்க

– நாமக்கல் கவிஞர்

*கவிஞர் அறிமுகம் :*

இப்பாடல் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களால் பாடப் பெற்றது. தமிழ்நாட்டு மக்களின் சிறப்பு இயல்புகளையெல்லாம் கூறித் தமிழ்நாடு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

*திரண்ட கருத்து :*

தமிழ் நாடு என்பது தமிழ்நாட்டு மக்களைக் குறிக்கின்றது. தாமே உழைத்துப் பொருள் ஈட்டி உண்ணுவார்களே அல்லாமல் பிறர் உழைப்பால் தமிழ் மக்கள் உண்ணமாட்டார்கள். இந்நாட்டிலுள்ள மக்களைப் பகைவர்களாக யாரும் எண்ணமாட்டார்கள். இதுவரை யாரும் அடையாத பெருந்துன்பங்கள் வந்தபோதும் நேர்மைக்குப் புறம்பாகச் சென்று அவற்றை நீக்க வேண்டுமென்று மக்கள் எண்ணமாட்டார்கள்.

உயிர்களைக் கொல்லாமையே மிகச் சிறந்த பண்பு என்ற எண்ணம் கொண்டவர்கள். பிறர்க்குக் கொடுப்பதே பேரின்பம் என எண்ணுகின்ற கொடை வள்ளல்கள் பலர் இங்கு உள்ளார்கள். வறுமை என்பதே அறியாத வளம்மிக்க நாடு என்றும் பிறரிடம் சென்று யாசிக்காதிருத்தலே அறம் என எண்ணும் மக்கள் வாழும் நாடு என்றும் கூறுகிறார்.

இவ்வளவு பண்பிற் சிறந்த மக்கள் வாழ்கின்ற, வளம் நிறைந்த தமிழ்நாடு வாழ்க எனக் கவிஞர் தமிழ்நாட்டை வாழ்த்துகிறார்.

*பொருள்நயம் :*

சில கருத்துக்களை எதிர்மறை முறையிலும், சிலவற்றை உடன்பாட்டு முறையிலும் கூறிக் கருத்துக்களை விளங்க வைக்கும் உத்தி சிறப்பாக உள்ளது. படையாமல் உண்ணாத பகை யாரும் எண்ணாத, அநியாயம் எண்ணாத என்று எதிர்மறையில் கூறி, அதனைத் தொடர்ந்து கொல்லாமை உயர்வு என்னும் உடன்பாட்டு முறையில் கருத்தைக் கூறுவது பொருள் நயம் சிறக்க வழிவகுத்துள்ளது.

*சொல்நயம் :*

படையாமல் உண்ணாத தமிழ்நாடு என்னும் தொடருக்கு தாம் உழைத்துப் பொருள்களைப் படைக்காமல் மக்கள் உண்ணமாட்டார்கள் என்றும், உழைத்துப் பெற்ற பொருளை இறைவனுக்குப் படைக்காமல் உண்ணமாட்டார்கள் என்றும் இருபொருள் தரும் வகையில் சொல்லை அமைத்துள்ளனர்.

பகையாரும் எண்ணாத தமிழ்நாடு என்னும் தொடருக்குத் தமிழ் மக்கள் பிறர்மீது பகை எண்ணமாட்டார் என்றும் பிறநாட்டு மக்கள் தமிழ் மக்கள் மீது பகை எண்ணமாட்டார் என்றும் பொருள் தரும் வகையில் அமைத்துள்ளார்.

*தொடை நயம் :*

*1) எதுகைத் தொடை :*

படையாமல் – அடையாமல் என முதல் இரண்டு அடிகளிலும், கொல்லாமை – இல்லாமை என இறுதி இரண்டு அடிகளிலும் எதுகைத் தொடடை அமைந்துள்ளது.

*2) மோனைத் தொடடை :*

படையாமல் – பகை – என்றும் அடையாத – அநியாயம் என்றும் கொல்லாமை – கொடைவள்ளல் என்றும் இல்லாமை – இரவாமை என்றும் சீர் மோனைத் தொடை அமைந்துள்ளது.

*3) இயைபுத் தொடை :*

ஒவ்வோர் அடியிலும் வாழ்க என இறுதிச் சொல் அமைந்திருப்பது இயைபுத் தொடை இயல்பாக அமைய வழி வகுத்துள்ளது.

*4) சந்த நயம் :*

எதுகை, மோனை, இயைபு ஆகிய தொடை நயங்கள் அமையப் பெற்ற இப்பாடல், பொருள் நயம் நிறைந்து, வாய் விட்டுப் படிக்கும் பொழுது இனிய ஓசையைத் தருதலால் சந்த நயமும் அமையப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

## Unit 10

*பள்ளி மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை வளர்க்க நீவிர் கையாளும் உத்திகளை விவரி.*

பள்ளி மாணவர்கள் மொழி ஆர்வத்தை அதிகரிக்க வளர்க்க அம்மொழி எங்ஙனம் உறுதுணையாக (வாழ்க்கைக்கு) அமைகிறது என்பதை புரிய வைக்க வேண்டும்.

*மொழியின் இன்றியமையாமை :*

மக்கள் வாழ்க்கையில் அனைத்து வகையிலும் பயன்படும்படி மொழி அமைகிறது. உணர்ச்சிகள் நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் சொற் பொழிவுகள் கட்டுரை எழுதுவதற்கும், அறிவியல் ஆராய்ச்சிக்கும், இலக்கண இலக்கியங்களை படித்து இன்புறுவதற்கும்,

அன்றாட வாழ்வில் அனைத்து அலுவலகம் மற்றும் அனைத்து நிலைகளிலும் பயன்படுகிறது என்று கூறி மொழி ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

*சிந்தனையை வளர்த்தல் :*

சிந்தனையற்ற செயல் திறன் அடைவதில்லை இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளூவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

சிந்தனை என்பது உள்ளது. நிலைக்கின்றதொரு செயலாகும். முன் அறிந்ததை நினைவுக்கு கொண்டுவருதல், சொல்வதைக் கேட்டு அறிந்து கொள்ளுதல். எண்ணத் தொடர்பை குறிக்கும் சொற்கள் பொறுமை சொற்கள் அதை சார்ந்த சொற்கள் என பலவாறு அமைவது உண்டு. இவற்றை சிந்தித்தல் மூலம் பல்வேறு திறன்களை மொழியார்வத்தின் வாயிலாக சிந்தனை அவசியமாகிறது.

*எண்ணத்தை வெளியிடும் கருவி :*

தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணத்தையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் தெளிவாக்க இயலும். இதற்கு மொழி ஆர்வமும் வளர்ச்சியும் உறுதுணையாகும். நமது எண்ணத்தை தெளிவாக தவறின்றி வெளியிடல் என்பது மொழி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

*நுகர்வுகளை எடுத்தியம்பல் :*

அனுபவித்த ஒன்றை மற்ற அனைவர்க்கும் எடுத்துக் கூறுதல் சிறப்பன்றோ. அதையே மொழி வாயிலாக எடுத்துச் சொல்லுதல் எடுத்துக்காட்டாக சுற்றுலா சென்றல் நாம் அங்கே கண்ட பேசிய விவரங்களை இங்கே மற்ற மாணவர்கட்கு எடுத்து இயம்பல், நல்ல விஷயங்கள் ஏதுவாகிலும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்தல் சிறப்பான ஒன்று.

*அறிவுக் களஞ்சியங்கள் :*

அறிவுக் களஞ்சியங்கள் அறிந்து கொள்ளல். மொழி பேசும் மக்கள் தம்திறமைக்கு ஏற்ப நிறைய கருத்துக்களை தெரிவிப்பார்கள். அது அறியாதவர்கள மொழியினால் அறிந்து கொள்ளலாம். மேலும் இலக்கண இலக்கிய அறிவுக்களை நிறை பெறலாம். வர்த்தை ஜாலங்கள், என்பார்கள். ஒருவர் சிறப்பாக பேசி ஒரு செயல் வெற்றியடையச் செய்வார்கள் இதனின்று மொழி ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

*கற்பிக்கும் வாயிலாக :*

கற்றல் கற்பித்தல், நிகழ்வுகட்கு மொழி அவசியமாகிறது. நாம் நன்றாக கற்றுக் கொள்ளலாம். அதை மொழிப் புலமை இருப்பதால் மட்டுமே மற்றவருக்கு எளிமையாக மற்றும் இனிமையாக எடுத்துக்கூற இயலும். மற்றவர்கட்கு கற்பித்தல் என்று கொண்டால் சரளமாக மொழி அறிவு தேவை என்பதை புரியவைத்து மொழி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கண்ட வழிகளில் மொழி ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்துவோம்.

*இன்றைய உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத் திட்டம் நிறைகுறைகள் யாவை?*

உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத்திட்டத்தில் மாணவர்கள் எந்த அளவு பாட அறிவு பெற்றிருக்க வேண்டும். எந்த திறன்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எந்த திறன்களை வளர்த்திருக்க வேண்டும். என்று கல்வி ஏற்பாடு பொதுப்படக் கூறுகிறது. எந்த வகுப்பிற்கு ஏற்ப அறிவு பெற வேண்டும். அதற்கேற்ப பாட உள்ளடக்கததை பட்டியலிட்டு தருகின்றது. மொழிப்பாடம் திறன் பாடம் என்பதால் திறன்கள் அடிப்படையில் மாணவர் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் அவர்கள் பெற வேண்டிய மதிப்பீடு, தேர்வு முறை தருகின்றது. இவ்வாறு உயர்நிலை பாடத்திட்டம் அமைந்துள்ளது.

வாழ்த்துப்பகுதி, நீதிப்பகுதி, தொடர்நிலைச் செய்யுள், கதை. பல்சுவைப்பாமாலை, மறுமலர்ச்சி பாடல்கள். வழிபாட்டுப்பாடல்கள் என இவையாவும் செய்யுள்பகுதியில் அமையப்பெற்றுள்ளன. உரைநடைப் பகுதியில் பன்னிரெண்டு பாடப்பகுதிகள் அமைந்துள்ளன. அதில் தேசியம், விடுதலைக்கு உழைத்தோர் பற்றிய செய்திகள் வாழ்வில் தொடர்பான செய்திகள், பொது அறிவு, பண்பாடு பற்றியது, விளையாட்டு பற்றியது என உரைநடைப்படுத்தியும் அமைந்துள்ளது. துணைப்பாட நூல்கள் என்ற தலைப்பில் மாணவர்கட்கு தேவையான நல்லறிவு கதைகளை பண்பாட்டுக் கதைகள், பண்டையகால செய்திகளைக் கூறும் கதைகள் என எட்டு கதைகள் அமைகின்றன. இவையாவும் மாணவனின் மனதை தெளிவு செய்ய படைக்கும் திறனை வளர்க்கும் நோக்கம் என பல வகையில் திறன்கள் மேம்பட செய்யும் வகையில் மொழிபாடத்தின் உரைநடை செய்யும் துணைப்பாடம் இலக்கணம் இவையாவும் அநைந்துள்ளது.

இலக்கணம் என்ற தனியாக பாடப்புத்தகம் அமைத்து அதில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என முறையாக ஐந்து இலக்கணம் அறியும் வண்ணம் மாணவர்கள் திறன் (இலக்கணத்திறன்) வளர வகைசெய்யும் விதத்தில் இலக்கணப்பாடம் அமைந்துள்ளது.

*நிறைகள் :*

1) உயர்நிலை பாடத்திட்டத்தில் போதுமான அளவு அனைத்து திறன்களும் வளரும் வண்ணம் அமையப்பட்டுள்ளது.

2) உரைநடை செய்யுள், துணைபாடம் இலக்கணம் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய செய்திகளாக அமையப்பெற்றமை மாணவர்கள் முழுமையான அறிவை பெற உதவும்.

3) பாடத்திட்டங்கள் யாவும் உயர்நிலைக்கு ஏற்றவாறு தாம் அமைந்துள்ளது.

4) கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

*குறைகள் :*

1) பல வருடங்களாக ஒரே மாதிரி அமைப்பில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

2) ஒன்றை படித்தபின்பு மேலும் அது சம்பந்தமான (தொடர்புடைய) புத்தகங்களை படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

3) தற்போதைய ஆசிரியர்கள் அதை சரியான (பாடல்) வகையில் பாடுவது கிடையாது.

4) மொழிப்பாடம் போதுமான அறிவைத், திறனை கொடுத்த போதிலும், நடைமுறையில் மாணவர்கள் திறம்பட செயல்பட வகை செய்வது குறைவாக அமைந்துள்ளது.

இவ்வாறு உயர்நிலை பாடதிட்டத்தில் தமிழ் மொழியின் நிலையும் நிறைவுகளும், குறைகளுமாக இங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

*தமிழ் மொழியின் மெய்யொலி வகைப்பாட்டை மொழியியல் வழி விளக்கு*

மொழியியல் அடிப்படையில் மெய், ஒலிகளை இருவகையாகப் பகுப்பர் 1) குரல் நாளத்தில் அதிர்வு ஏற்பட பிறக்கும் ஒலி 2) அதிர்வு ஏற்படாமல் பிறக்கும் ஒலி.

எ.கா. 1 பங்கு, அங்கு, தங்கம், 2) கம்பி, கட்டு.

*தமிழில் காணப்படும் அசை அழுத்தங்களைச் சான்று காட்டி விளக்கு*

தமிழில் அசை என்பது யாப்பிலக்கணப்படி எ.கா. 1) அணி. அணில். வினா, விளாம்

நிரையசை : என்ற வடிவில் அமையும்

நேரசை : ப. வா, பல், வான், என்ற எழுத்து அமைப்பில் அமைவது என இருவகைப்படும். இதுவே அசையழுத்தங்களாகும். இவை எழுத்துக்களால் அமைவதே அசை எனப்படும்.

*ஒலி எண்*

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களே ஒலி எண்கள் என்று மொழியிலார் கூறுகின்றனர். உயிர் ஒலி எண்கள், மெய்யொலி எண்கள் என இருவகைப்படுகின்றன.

*மொழியின் உளவியல் அடிப்படைகள்* மொழியின் உளவியல் அடிப்படைகள் என்பது உளவியலார் கோட்பாடுகள், மொழியியல் அணுகுமுறைகள் அறிவியல் சாதனங்களின் பயன்பாடுகள். இலக்கிய அறிஞர்களின் மொழி பயன்பாடு ஆகிய அனைத்தையும் உரிய முறையில் கையாளுதல்.

*எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்*

| பேச்சு மொழி | எழுத்து மொழி |
|---|---|
| 1. பேச்சு மொழியை ஆராய்தல் எளிதன்று. | எழுத்து மொழியை ஆராய்தல் எளிது. |
| 2. பேச்சு மொழி செவிக்கு மட்டுமே புலனாகி உடனே மறைந்துவிடும். | இது கண்ணுக்கு புலனாகக் கூடியது யாவரும் எளிதில் எழுதிக்காக்கக் கூடியது. |
| 3. செவி வழியாக இலக்கியம் நீடு வாழ்வதில்லை. | எழுதப்படும் இலக்கியம் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்பதால் பெருமதிப்பும் செல்வாக்கும் பெறுகிறது. |
| 4. செவி வழியாக வருவன மாறுபடலாம். | முதலில் ஏற்பட்டது மாறுபடாது. |
| 5. பேசுவோர் தவிர வேறு யாரிடமும் | மொழிக்குத் துணையாக நிகண்டுகள் |

| | |
|---|---|
| கேட்டு உறுதிப்படுத்த முடியாது. | அகராதிகள் இலக்கண நூல்கள் சிறப்புத் தேடித் தருகின்றன. |

*மொழிப்பாடம் கற்பித்தலில் தொலைக்காட்சியின் பயன்பாடு* 1) மொழி உச்சரிப்பை கூர்ந்து கவனிக்க முடியும்.

2) காட்சிக் கேள்வி என்பதால் நன்கு மனதில் பதிய வைக்க முடியும்.
3) உதாரணங்கள், TLM முதலியவற்றை நேரடியாக காண்பிக்கலாம். (இயக்கமுடன்)
4) செய்து காட்டல் எளிதில் கற்க கற்பிக்க முடியும்.

*நுண்ணிலைக் கற்பித்தல்*

ஏதேனும் ஒரு சிறு தலைப்பில் ஒரே கருத்து, திறன் சில மணித்துளிகள் (5-7 நிமிடங்கள்) 5, 6 மாணவர்கட்கு மட்டும் கற்பிக்கும் நிகழ்வு நுண்ணிலைக் கற்பித்தல் எனப்படும்.

*பாடத்திட்டம்* ஒருபாட வேலையில் நடத்தப்பட வேண்டிய பகுதியை முன்கூட்டியே தயாரித்து அதற்கு தேவைாயன முறைப்படி மற்ற உபகரணங்கள் எப்போது எப்படி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே பாடத்திட்டம் எனப்படும். முன் கூட்டியே திட்டமிடுதலே (செயல்வடிவத்தோடு) பாடதிட்டம் என்பர்.

*கட்டுரையின் வகைகள்* 1) படக்கட்டுரை, 2) கதைக்கட்டுரை., 3) சிந்தனைக்கட்டுரை, 4) விவாதக்கட்டுரை, 5) வரலாற்றுக்கட்டுரை 6) வருணணைக் கட்டுரை, 7) கற்பனைக் , பாணிப்புக் கட்டுரை 8) ஆய்வுக் கட்டுரை 9) உரையாடல் கட்டுரை என பலவகைப்படும்.

*நல்ல கையெழுத்தின் பண்புகள்*

1) தெளிவான கையெழுத்து தனித்தனியாக வளைவு சுளுவுடன் எழுதுதல் வேண்டும்.
2) அளவும் அழகும் ஒரே சீராக அமைத்தல்.
3) இடைவெளி விட்டு எழுதுதல்.
4) விரைவாகவும் எழுதுதல்.
5) பிழையின்றி எழுதுதல்.

*குழுக் கற்பித்தல் அதன் நிறைகுறைகள்*

வகுப்பில் உள்ள மாணவிகளை சிறுசிறு குழுக்களாக அவர்களின் திறமைக்கு ஏற்ப பிரித்து கற்பித்தல் நிகழ்வது குழுக்கற்பித்தல் எனப்படும்.

*<u>நிறைகள் :</u>*

1) குழுக்களாக அமைத்தல் ஒருவர்க்குகொருவர் அறிந்ததை பகிர்ந்து கொள்ளுதல்
2) விடை கண்டறியும் காலம் குறைவு.
3) ஆசிரியர் மேற்பார்வை மட்டுமே போதுமானது.

*<u>குறைகள் :</u>*

1) ஒருவர்க்கு ஒருவர் பேசி காலம் வீணடிக்கலாம்.

2) ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் தேவையான திட்டங்களை தயாரித்தால் காலம் அதிகமாகும். பொருட்செலவும் அதிகமாகும்.

3) குழுவில் ஒருசிலரே கற்க வாய்ப்பு உள்ளது. சிலர் செயல்படாமல் கற்றுக்கொள்ள இயலாது போகிறது.

*தமிழ் கற்பித்தல் மேற்பார்வை படிப்பின் பங்கினை விளக்குக*

மாணவர்கள் படிக்கும் முறைகளில் வழிகாட்டியாக இருந்து படிக்கச் செய்தலே மேற்பார்வை படிப்புமுறை ஆகும். இதை கற்பிக்கும் முறை என்பதை விட நல்ல படிக்கும் முறையை மேற்கொள்ளும் வழி எனலாம். ஒப்படைப்போ சில வினாக்களோ மாணவர்கட்கு கொடுத்து நூல்களிலிருந்து அவற்றிற்குறிய விடையை தேர்ந்தெடுத்தால் அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது திறன்கள் மேம்படுதல் அதாவது (தலைப்பு, முன்னுரை, பொருளடக்கம்) நூல் நிலையத்தை பயன்படுத்தும் விதத்தை ஆசிரியர் விளக்குதல். இவ்வாறு மேற்பார்வை படிப்பு அமைகிறது.

*தமிழாசிரியர்கட்கும் பணிமுன் பயிற்சி தேவை. நிறுவு*

தமிழாசிரியர்கள் புலவர் பட்ட பெற்றதனால் பணிமுன் பயிற்சி தேவையில்லை என ஒருசிலர் கருத்து நிலவுகிறது. இருப்பினும் புலவர் படிப்பின் போது மாணவர்கள் ஆசிரியர் தகுதி,

மாணக்கர் நிலை, கற்பிக்கும் முறை என யாவற்றையும் இலக்கணம், தெளிவாக கற்பிக்கிறது. ஆனால் அதற்கு உண்டான பயிற்சிக்களம் பணிமுன் பயிற்சியிலேதான் கிடைக்கிறது. அதனால் பணிமுன் பயிற்சியான (B.Ed.,) தேவை என அறிவுறுத்தப்படுகிறது.

*தமிழ் கற்பித்தலில் வளர்ச்சித்திட்ட ஆய்வின் பாங்கினை எழுதுக*

தமிழ் கற்பித்தலில் வளர்ச்சித் திட்ட ஆய்வு என்பது ஊடகங்கள் வழியே கற்பிப்பது. E. Technology வழி கற்பித்தல் என கணிணி வழியே குளோபலைசேஷன் முறையில் ஓர் இடத்தில் இருந்து வகுப்பு கற்பித்தல் நிகழ்வதை உலகின் எங்கிருப்போரும் கற்கும் நிலையை அடையச் செய்வதே அது தற்போது ஆய்வு நிலையில் உள்ளது. அப்போது காட்சிக் கேள்விக் கருவிகள் நமக்கு மனதில் பதியும் வண்ணம் கற்பித்தல் நிகழ்கிறது. இவ்வாறு கற்பித்தலில் வளர்ச்சித் திட்ட ஆய்வின் பாங்கு வெளிப்படுகிறது.

*தாய்மொழி கற்பித்தலின் இன்றியமையாமையை*

தாய்மொழி கற்பித்தலின் அவசியம் கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம். அவை.

1) அடிப்படைத் திறன்களை கேட்டல், படித்தல், பேசுதல், எழுதுதல் என்றபடி மேம்பட செய்தல்.
2) இலக்கியங்களை ரயமுணர்ந்து, இன்புற்று மேலும் படிக்கும் ஆர்வம் ஏற்படுத்தலாம்.
3) இலக்கிய இலக்கணங்களை படிப்பதன் மூலம் நமது சிந்தனையை வளர்த்தல்.
4) சொற்களஞ்சியத்தை பெறுக்குதல்.
5) எண்ணத்தை வெளியிட உதவும் கருவியை செம்மைப்படுத்துதல்.
6) படைப்பாற்றலை ஊக்கப்படுத்தி சிறந்த படைப்பை உருவாக்குதல்.
7) தனது வாழ்க்கை நுகர்வுகளை எடுத்துக் கூறுதல்.
8) கற்பனைத் திறனை வளர்த்தல் / மக்கள் பண்பாட்டை மேன்மேலும் உயர்த்துதல்.
9) ஒழுக்கம், மொழிபற்று நாட்டுப்பற்று அறிவுறுத்தல்.
10) இறைவுணர்வினை ஊட்டல், சமூக பண்பாட்டு மறபினை அறிதல்.

*வகுப்பறைக் கற்பித்தலின் நிறைகுறைகள்*

*<u>நிறைகள் :</u>*

1) பலதரப்பட்ட மாணவர்களுக்கு ஒரே மாதிரியான கற்பித்தல் நடைபெறுகிறது.
2) காலம் வீணாகாமல் போன்று அமைகிறது விரைவாக (முடிக்கும் மாணவர்கள்)
3) ஒப்படைப்புகள் தயாரித்தல் ஆசிரியருக்கு எளிதாகின்றது.
4) கற்பித்தல் பாடத்திட்டம் தயாரித்தல் எளிது.

*<u>குறைகள் :</u>*

1) குறைகள் எனப்படும்போது மாணவர்கள் திறன்கட்கு ஏற்ற வகையில் கற்பித்தல் நிகழாது.
2) ஆசிரியர் தயாரித்தல், ஒரே மாதிரியாக அமையும்.
3) கூட்டம் அதிகமாக இருப்பதால் கவனமின்மை ஏற்படும் மாணவர் / ஆசிரியருக்கும்.
4) மாணவர்கட்கு கற்றல் நிறைவு ஏற்படாது (அனைத்து)

*உடம்படு மெய்*

“இ ஈ ஐ வழி யவ்வும் ஏனைய
உயிர்வரின் வவ்வும்”

என்ற தொல்காப்பிய நூற்பாப்படி சொற்களின் இணைப்பதற்கு உதவியாக செயல்படுவது ய், வ் என்ற எழுத்துக்கள் (மெய் எழுத்துக்கள்) முதல் மொழியோடு வரும் மொழி புணரும் போது முதல் உயிர் இ ஈ ஐ வருமாயின் <u>ய்</u> என்ற மெய்யெழுத்து இணைப்பு எழுத்தாக அமையும் மற்ற உயிரெழுத்துக்கள் (எ. ஏ. உ….) வ் என்ற மெய்யெழுத்து இணைப்பைத் தரும். உதாரணம் : (ய்) மணி + அடி = மணியடி.

*நாடோடிப்பால் இலக்கியத்தின் சிறப்பு* நாடோடிகள் பல்வேறு பகுதிகளில் சுற்றி திரிந்து கொண்டு இருப்பார்கள். இவர்கட்கு பெயர்தான் நாடோடிகள். ஓரிடத்தில் நிலையாக தங்குவது கிடையாது. இவர்களது இலக்கியம் பெரும்பான்மையும் வாய்மொழி இலக்கியங்களே. பாடல் அமைப்பாகவே இருக்கும். சில கலாசார அமைப்பில் நாடகம் – சடங்கு முறைகளை அவர்களுடைய கலை வழிவழியாக செய்யப்படுவது உண்டு. இதுவே நாடோடி இலக்கியத்தின் சிறப்பாகும். மேலும் அவர்களது குரல் வளத்திற்கேற்ப சிறப்பாக மகிழ்ந்து பாடுவார்கள்.

*தமிழ் மொழிக் கற்பித்தலில் கணிப்பொறியின் பாங்கி கணிப்பொறியின் பங்கு :*

கணிப்பொறி கற்பித்தலில் புதிய வழிமுறையினை தந்துள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில் கணிப்பொறிகள் எந்த அளவிற்கு கல்விச் செயலில் புரட்சிகரமான பயனுள்ள மாற்றங்களை தோற்றுவிக்கவள்ளன என்பதற்கு நம்பிக்கையூட்டும் முன்னோடிகளாக விளங்குகின்றன.

1) பள்ளிகளில் ஆசிரியர்களை பல்வேறு சலிப்பூட்டும் செயல்களில் ஈடுபடவேண்டியுள்ளது. மாணக்கர்களை பல்வேறு செயல்களில் ஈடுபட வைக்க வேண்டிள்ளது. பல்வேறு வகுப்புகளாக பாட கால அட்டவணைகள் தயாரித்து பிரித்தல், பல்வேறு விவரங்களை தேர்ந்தெடுத்து பதிவு செய்து வைத்தல் புதுப்பித்தல் தேவைப்படும் போது பழைய பதிவுகளில் இருந்து தேவையான செய்திகளை தேடி படி எடுத்தல், மதிப்பெண் பட்டியல்கள் தயார் செய்தல் ஆகியன போன்று பல்வே செயல்களை கணிப்பொறி கொண்டு எளிதாக்கலாம்.

2) பள்ளிகளில் கற்பித்தலுக்கான தேவையான அனைத்தும் எல்லா மாணவர்கட்கும் போதுமானதாக இராது. மாணாக்கர் பற்றிய செய்திகளை ரகசியமாக வைத்துக் கொள்ள கணிப்பொறி உதவுகிறது. மாணக்கர்கட்கு அறிவுரை கூறி (கவுன்சிலிங்) ஆலோசனை வழங்கும் செயலிலும் கணிப்பொறி பயன்படுகிறது. கற்றல் கற்பித்தலில் பாடத் தொடர்பினை ஏற்படுத்தி பயன்பாடுடைய உயர்ந்ததாகவும் கணிப்பொறிகள் பயன்படுகின்றன.

கல்வியில் கற்றல் பங்கு :

கணிப்பொறி சார்ந்த கற்பித்தல் கணிப்பொறியின் செயற்பாடு எந்த அளவுக்கு கற்பித்தலில் முக்கியத்துவம் பெற்று காணப்படுகிறது என்பதனைப் பொறுத்து சிலவகைப்பட்ட முறைகள் கையாளப்படுகின்றன. 1) கணிப்பொறியின் முழுமையான மேலாண்மையினை ஏற்று நிகழும் கற்பித்தல் (CMI) 2) கணிப்பொறியினி அடிப்படையில் அமைக்கப்படும் (CBI கற்பித்தல் மற்றும் கணிப் பொறியின் துணையுடன் நிகழும் கற்பித்தல் (CAI) ஆகியன இவையாம். இவற்றுள் மூன்றாவது முறை நேரடியாக வகுப்பறை கற்பித்தலுக்கு மிகுதியும் உதவும். கணிப்பொறியின் மேலாண்மைய ஏற்று நடத்தும் கற்பித்தலில் விவரங்களை பதிவு செய்தல் (Rec. Key), ஆகும். நேரடியாக கற்போனுக்கு கற்பித்தலில் இம்முறை ஈடுபடாது. கற்போனது தற்போதைய பொருளறிவு நிலை கற்றலில் அவனிடம் உள்ள குறைபாடுகள், இவைவெளிகள் இவற்றை நிவர்த்திக்க பயன்படும். வழிகள் போன்றவற்றை தொகுத்து அளிக்கும். கம்ப்யூட்டரின் மேலாண்மை பணிகளாக அமையும். கணிப்பொறி கொண்டு கற்பிக்கப்படும் கற்பித்தல் பெரும்பாலும் தொழில் சார்ந்த பயிற்சியில் அதிகம் பயன்படும். இம்முறையில் உண்மை, வாழ்க்கை நிலைமை போன்ற ஒரு கற்பித்தல் நிலைமையை உருவாக்கும். கணிப்பொறியின் இப்பணியின் விளைவாக நம்மால் எனில் ஆராயமுடியாத வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றி அறிந்து அவற்றிற்கேற்ப செயல்பட பயிற்சி அளித்தல் இயலும்.

பொதுவாக வகுப்பறை கற்பித்தலுக்கு கணிப்பொறியின் துணையினை பயன்படுத்துதல் பள்ளி கற்பித்தலுக்கு மிக்க பயனுள்ளதாக அமையும். இம்முறையும் இன்று முழுமை பெற்று விளங்குவதாக அமையவில்லை. எனினும் கற்பித்தலில் புரட்சி ஒன்றினை தோற்றுவிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இம்முறையில் அடங்கியுள்ளன என துணிந்து கூறலாம். இம்முறையில் கணிப்பொறி கற்பித்தலுக்கு பயன்படுத்தும் போது கற்க தேவைப்படும் பொருள்களை இடுபொருளாக முன் கூட்டியே திட்டமிட்ட முறையில் அளிக்கப்படுகிறது. இத்திட்டமிட்ட பாடப்பொருள் முந்தைய பாடப்பொருளாக குறிப்பிட்டபடி நீள்முறை பாடப்பொருள், கிளைவரித் திட்ட அமைப்பிலோ இருக்கலாம். இந்த கற்பித்தல் முறையல் கணிப்பொறி திறன்வாய்ந்த கற்பித்தல் கருவியாக பயன்படுகிறது. மேலும் மாணக்கர் ஒருவனது தேவைக்கேற்ப அவனுடன் இடைவெளியின்றி கற்பித்தலுக்கு உதவுவதால் கணிப்பொறி துணையுடன் கற்பித்தல் நிகழ்கிறது. இதனை நெகிழ்ச்சி முயைாகவும் அறியலாம். மாணக்கர் தேவையினை மனதில் கொண்டு மேலும் பல்வேறு செய்திகளை, விடைகளை மாணக்கருக்கு தரும். மாணவர் விடையளிக்க எத்துனை நேரம் எடுத்துக்கொள்கிறார் என்பதையும் பதிவு செய்து மேலும் உதவுகிறது. மேற்கண்டவாறு கணிப்பொறி கல்விப் பணியில் பங்கு வகித்து ஆக்கக் கூறுகளை கொண்டதாக அமைகிறது.

*உரைநடையின் தோற்றமும் வளர்ச்சி தோற்றம் :*

உரைநடையின் தோற்றம் கிட்டதட்ட இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் 18-ம் நூற்றாண்டிலே இலக்கணத்திற்கு உரை எழுதிய சேனாவரையர், சேந்தனார், இம்பூரணார், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினயர், கல்லாடர், இறையனார், களவியல் உரை, இலக்கியத்திற்கு உரை எழுதிய பரிமேளழகர், அடியார்க்கு நல்லார், நன்னூலுக்கு சிவஞான முனிவர், மயிலை நாதர், யாப்பு - குணசாகரர். என பல உரைநடை வளர்ச்சிக்கு பெரிதும் போற்றப்பட்டவர்கள். நிறைய இலக்கியங்கட்கும் உரை எழுதியவர்கள் உண்டு. காலப்போக்கில் 20-ல் நாவல் உண்டாயிற்று

(புதினம்) முதல் நாவலாக பிரதாப முதலியார் சரித்திரம், எழுதியவர் மயுரம் வேதநாயகம் பிள்ளை. வெளிநாட்டு கல்வியாளர்கள் இந்தியாவிற்கு வந்தவுடன் அச்சு எந்திரம் எழுது பொருள்கள் என பல ஏற்படலாயின. பாரதியார் கவிதைகள், பாரதிதாசனார் போன்றவர்கள் தங்களுடைய கவிதைகளை வசன கவிதை என தோற்றுவித்தனர்.

சிலப்பதிகாரத்தில கூட உரையினயிட்ட பாட்டைச் செய்யுள் என்பன போன்ற அமைப்பில் இலக்கியம் யாக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்தும் உரைநடை இலக்கியமே. அதிக அளவில் உருவாகிறது. ஓலைச் சுவடியில் உள்ள நிறைய இலக்கியங்களை அச்சேற்றிய பெருமை உ.வே.சா. அவர்களையேச் சாரும். கம்பராமாயணத்திற்கு உரையெழுதிய பெருமை வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் சுமார் 30 வருடங்கள் உழைத்து உரை எழுதினார். இவ்வாறாக இலக்கணம், இலக்கியம் யாவற்றிற்கும் உரைநடை பங்கு 18-ம் நூற்றாண்டில் தொடங்கி 20ம் நூற்றாண்டில் நன்கு வளர்ச்சியுற்று தற்போது செழித்து வளர்ந்து கொண்டு இருக்கிறது.

*வளர்ச்சி :*

வளர்ச்சி என்பது 18-ம் நூற்றாண்டில் தோன்றிய உரைநடை தற்போதும் 20-ம் நூற்றாண்டிலும் வளரத் தொடங்கியது. கவிதை உள்ளே உரைநடை தோன்றியது சிலப்பதிகாரத்தில். அது சற்றே மறைந்து வெளிப்படையாக இலக்கண இலக்கியங்கட்கு உரை எழுதத் தொடங்கினார்கள். இதுவே உரைநடை காலத்தின் வளர்ச்சி எனலாம். அது ஆங்கிலேயர்கள் வருகை மற்ற அனைத்து இலக்கியங்களும் இலக்கண புத்தக வடிவம் பெற்றன. அனைத்து உரைநடைகளும் வடிவம் பெற்றன.

இன்று உரைநடை கையெழுத்து பிரதியிலிருந்து அச்சு எந்திரம் வாயிலாக புத்தக வடிவம் பெற்று வளர்ந்துள்ள. 19, 20-ம் நூற்றாண்டில் தற்போதைய 21-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கணிணியின் உதவி கொண்டு பிளாப்பி, சிடி, பென்டிரைவ் என பல வடிவங்களில் உரைநடை தொகுப்பு வெளிவரலாயின. வெப் உலகம் இன்று இண்டர்நெட் மூலமாக அனைத்து நாள், வார, மாத இதழ்களை படிக்க முடியும். அதிகப்படியான புத்தகம் இப்போது வளை தளம் வழியாக அனைத்து வகையான இலக்கண இலக்கியங்களும் உறுவாகின்றன. அந்த அளவிற்கு உரைநடை வளர்ச்சி பெற்றுள்ளது.

முடிவாக 18-ம் நூற்றாண்டில் தோன்றிய உரைநடை தற்காலத்தில் சிறிய சிப் லே காட்சி கேள்வி பொருளாக அமையப் பெற்றுள்ளது. மிகச்சிறந்த வளர்ச்சியினை பெற்றுள்ளது. என்பதில் பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாக நாம் கருதவேண்டும்.

*பள்ளி மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை வளர்க்க நீவிர் கையாளும் உத்திகளை* பள்ளி மாணவர்கள் மொழி ஆர்வத்தை அதிகரிக்க வளர்க்க அம்மொழி எங்ஙனம் உறுதுணையாக (வாழ்க்கைக்கு) அமைகிறது என்பதை புரிய வைக்க வேண்டும்.

*மொழியின் இன்றியமையாமை :*

மக்கள் வாழ்க்கையில் அனைத்து வகையிலும் பயன்படும்படி மொழி அமைகிறது. உணர்ச்சிகள் நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் சொற் பொழிவுகள் கட்டுரை எழுதுவதற்கும், அறிவியல் ஆராய்ச்சிக்கும், இலக்கண இலக்கியங்களை படித்து இன்புறுவதற்கும், அன்றாட வாழ்வில் அனைத்து அலுவலகம் மற்றும் அனைத்து நிலைகளிலும் பயன்படுகிறது என்று கூறி மொழி ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

*சிந்தனையை வளர்த்தல் :*

சிந்தனையற்ற செயல் திறன் அடைவதில்லை இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

சிந்தனை என்பது உள்ளது. நிலைக்கின்றதொரு செயலாகும். முன் அறிந்ததை நினைவுக்கு கொண்டுவருதல், சொல்வதைக் கேட்டு அறிந்து கொள்ளுதல். எண்ணத் தொடர்பை குறிக்கும் சொற்கள் பொறுமை சொற்கள் அதை சார்ந்த சொற்கள் என பலவாறு அமைவது உண்டு. இவற்றை சிந்தித்தல் மூலம் பல்வேறு திறன்களை மொழியார்வத்தின் வாயிலாக சிந்தனை அவசியமாகிறது.

*எண்ணத்தை வெளியிடும் கருவி :*

தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணத்தையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் தெளிவாக்க இயலும். இதற்கு மொழி ஆர்வமும் வளர்ச்சியும் உறுதுணையாகும். நமது எண்ணத்தை தெளிவாக தவறின்றி வெளியிடல் என்பது மொழி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

*நுகர்வுகளை எடுத்தியம்பல் :*

அனுபவித்த ஒன்றை மற்ற அனைவர்க்கும் எடுத்துக் கூறுதல் சிறப்பன்றோ. அதையே மொழி வாயிலாக எடுத்துச் சொல்லுதல் எடுத்துக்காட்டாக சுற்றுலா சென்றல் நாம் அங்கே கண்ட பேசிய விவரங்களை இங்கே மற்ற மாணவர்கட்கு எடுத்து இயம்பல், நல்ல விஷயங்கள் ஏதுவாகிலும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்தல் சிறப்பான ஒன்று.

*அறிவுக் களஞ்சியங்கள் :*

அறிவுக் களஞ்சியங்கள் அறிந்து கொள்ளல். மொழி பேசும் மக்கள் தம்திறமைக்கு ஏற்ப நிறைய கருத்துக்களை தெரிவிப்பார்க்ள. அது அறியாதவர்க்ள மொழியினால் அறிந்து கொள்ளலாம். மேலும் இலக்கண இலக்கிய அறிவுக்களை நிறை பெறலாம். வர்த்தை ஜாலங்கள், என்பார்கள். ஒருவர் சிறப்பாக பேசி ஒரு செயல் வெற்றியடையச் செய்வார்கள் இதனின்று மொழி ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

*கற்பிக்கும் வாயிலாக :*

கற்றல் கற்பித்தல், நிகழ்வுகட்கு மொழி அவசியமாகிறது. நாம் நன்றாக கற்றுக் கொள்ளலாம். அதை மொழிப் புலமை இருப்பதால் மட்டுமே மற்றவருக்கு எளிமையாக மற்றும் இனிமையாக எடுத்துக்கூற இயலும். மற்றவர்கட்கு கற்பித்தல் என்று கொண்டால் சரளமாக மொழி அறிவு தேவை என்பதை புரியவைத்து மொழி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கண்ட வழிகளில் மொழி ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்துவோம்.

*இன்றைய உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத் திட்டம் நிறைகுறைகள்* உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத்திட்டத்தில் மாணவர்கள் எந்த அளவு பாட அறிவு பெற்றிருக்க வேண்டும். எந்த திறன்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எந்த திறன்களை வளர்த்திருக்க வேண்டும். என்று கல்வி ஏற்பாடு பொதுப்படக் கூறுகிறது. எந்த வகுப்பிற்கு ஏற்ப அறிவு பெற வேண்டும். அதற்கேற்ப பாட உள்ளடக்கததை பட்டியலிட்டு தருகின்றது. மொழிப்பாடம் திறன் பாடம் என்பதால் திறன்கள் அடிப்படையில் மாணவர் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் அவர்கள் பெற வேண்டிய மதிப்பீடு, தேர்வு முறை தருகின்றது. இவ்வாறு உயர்நிலை பாடத்திட்டம் அமைந்துள்ளது.

வாழ்த்துப்பகுதி, நீதிப்பகுதி, தொடர்நிலைச் செய்யுள், கதை. பல்சுவைப்பாமாலை, மறுமலர்ச்சி பாடல்கள். வழிபாட்டுப்பாடல்கள் என இவையாவும் செய்யுள்பகுதியில் அமையப்பெற்றுள்ளன. உரைநடைப் பகுதியில் பன்னிரெண்டு பாடப்பகுதிகள் அமைந்துள்ளன. அதில் தேசியம், விடுதலைக்கு உழைத்தோர் பற்றிய செய்திகள் வாழ்வில் தொடர்பான செய்திகள், பொது அறிவு, பண்பாடு பற்றியது, விளையாட்டு பற்றியது என உரைநடைப்படுத்தியும் அமைந்துள்ளது. துணைப்பாட நூல்கள் என்ற தலைப்பில் மாணவர்கட்கு தேவையான நல்லறிவு கதைகளை பண்பாட்டுக் கதைகள், பண்டையகால செய்திகளைக் கூறும் கதைகள் என எட்டு கதைகள் அமைகின்றன. இவையாவும் மாணவனின் மனதை தெளிவு செய்ய படைக்கும் திறனை வளர்க்கும் நோக்கம் என பல வகையில் திறன்கள் மேம்பட செய்யும் வகையில் மொழிபாடத்தின் உரைநடை செய்யும் துணைப்பாடம் இலக்கணம் இவையாவும் அநைந்துள்ளது.

இலக்கணம் என்ற தனியாக பாடப்புத்தகம் அமைத்து அதில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என முறையாக ஐந்து இலக்கணம் அறியும் வண்ணம் மாணவர்கள் திறன் (இலக்கணத்திறன்) வளர வகைசெய்யும் விதத்தில் இலக்கணப்பாடம் அமைந்துள்ளது.

*நிறைகள் :*

1) உயர்நிலை பாடத்திட்டத்தில் போதுமான அளவு அனைத்து திறன்களும் வளரும் வண்ணம் அமையப்பட்டுள்ளது.

2) உரைநடை செய்யுள், துணைபாடம் இலக்கணம் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய செய்திகளாக அமையப்பெற்றமை மாணவர்கள் முழுமையான அறிவை பெற உதவும்.

3) பாடத்திட்டங்கள் யாவும் உயர்நிலைக்கு ஏற்றவாறு தாம் அமைந்துள்ளது.

4) கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

*குறைகள் :*

1) பல வருடங்களாக ஒரே மாதிரி அமைப்பில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

2) ஒன்றை படித்தபின்பு மேலும் அது சம்பந்தமான (தொடர்புடைய) புத்தகங்களை படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

3) தற்போதைய ஆசிரியர்கள் அதை சரியான (பாடல்) வகையில் பாடுவது கிடையாது.

4) மொழிப்பாடம் போதுமான அறிவைத், திறனை கொடுத்த போதிலும், நடைமுறையில் மாணவர்கள் திறம்பட செயல்பட வகை செய்வது குறைவாக அமைந்துள்ளது.

இவ்வாறு உயர்நிலை பாடதிட்டத்தில் தமிழ் மொழியின் நிலையும் நிறைவுகளும், குறைகளுமாக இங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

*மொழியின் தேவை* மொழியிருப்பதால் ஒருவரின் தேவையை மற்றவர்க்கு புரிய வைக்கிறோம். கருத்து பரிமாற்றம் தொடர்புகொள்ள எளிமையாக துணைபுரிவது மொழி.

*குரல் அழுத்தம்* சில வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து பேசும்போது கவனம் மிகுகிறது. இதனால் கற்பித்தலில் இந்த அழுத்தம் தேவைப்படுகிறது. அவ்வழுத்தம் முக்கியத்துவத்தையும் புரிய வைக்கிறது.

*வெற்றுறுபுகள் – சாரியை*

வெற்றுறுபுகள் செய்யுளில் இசையை நிறைவு செய்யும் பொருட்டு வருபவை. அது போல சொற்களில் சாரியை ஒலியை மிகுவிக்க அல்லது மறிவி வழங்க பயன்படுகிறது. இவ்வாறு வெற்றுறுபுகள் – சாரியை இரண்டும் இசை நிறைவு செய்வதற்காக அமைந்துள்ளது.

*மொழி கற்றலில் கற்பனை* மொழி கற்றலில் கற்பனை அவசியம் நமது கற்பனைக்கு ஏற்றவாறு கதை, கட்டுரை, கடிதம், கவிதை, நாடகம் இவற்றை படைக்கலாம். எனவே கற்பனை மொழி கற்றலில் உறுதுணையாக அமைகிறது.

*ஒழுங்குமுறை இலக்கணம்*

தமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என பிரிப்பர் இதே வரிசையில் (முறையில்) கற்பிப்பர். இதனையே ஒழுங்குமுறை இலக்கணம் என்பர்.

*சொற்களஞ்சியப் பெருக்கம்* மாணவர்கள் கல்வி கற்கும்போது தனது மொழிப்புலமை வளர்த்துக்கொள்ள நிறை சொற்களை கையாள வேண்டும் பேசும்போது, கவிதை எழுதும்போது கவனித்தலின்போது இவ்வாறு சொற்களை தனது புலமையை பெருக்குதலே சொற்களஞ்சியப் பெருக்கம் எனப்படுகிறது.

*திட்டமிட்டு கற்றல்* மாணவர்கட்கு கற்பிக்க வேண்டிய பாடப்பகுதியை சிறுசிறு பகுதிகளாக பிரித்துக் கொண்டு அதை (சிறு சிறு சட்டங்களாக) கற்பித்தல் வினா எழுப்புதல் விடையும் அடுத்த சட்டத்தில் இருக்கப் பெறுதல் இதுவே திட்டமிட்டுக் கற்றல் எனப்படும்.

*இலக்கிய திறனாய்வு*

இலக்கியங்களில் பல்வேறு வகையான கருத்துக்கள் செய்திகள், பண்புகள், இயற்கை வர்ணங்கள், ஒப்புமைகள், வேறுபாடுகள் என பொதிந்துள்ளன. அவற்றை ஒரு நிறை நிரல் அமைப்பில் ஆய்வு செய்தலே ஆகும்.

*செயலாய்வு* ஆய்வு பலவகைப்படும் ஆராய்தல் என்றால் தேடுதல், சிக்கலை நீக்கல், புதுவழிகாணல் என கூறலாம். இதை களத்தில் இறங்கி நிகழ்வுகளை செயல்படுத்தி அதனை நிறுவுதல் செயலாய்வு என கூறலாம். இவ்வாய்வு செயல்படின் சிறப்பாகும்.

*புறவயச் சோதனை*

ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கும்படி வினா அமைதல் புறவயச் சோதனை எனப்படும். அதாவது கோடிட்ட இடங்களை நிறப்புதல், சரியா? தவறா? பொருத்துதல்,............. போன்ற வினாச்சோதனை புறவயச் சோதனை எனப்படும்.

ஏதேனும் ஆறு வினாக்கட்கும் விடையளி :

*தாய்மொழி வழி கல்வியில் வழிகல்வி முறையில் மாணவர் சமாதனம் பெறும் பயன்களைப் பட்டியலிடுக*

தாய் மொழிவழிக் கல்வியில் மாணவர் சமுதாயம் அனைத்து பாடங்களையும் கற்றுக் கொள்ளுதல் என்பது மிகவும் எளிமையானது. புரிந்து கொள்ளுதல் மிக எளிமை 1) சிந்தனை வளர்கிறது எனலாம். ஒரு பொருளுக்குரிய பொருளை உணர்ந்தால்தான் சிந்தனை சிறப்பாக நிகழ்த்த முடியும். 2) எண்ணத்தை வெளியிட மொழி வழி கல்வி அவசியமாகிறது. 3) செயல் ஆற்றல் சிறந்து விளங்க பயனுடையதாக அமைகிறது. பண்பாடு அறிதல், மொழி ஆர்வம் நாட்டின் மீது பற்று, இறைவுணர்வினை ஊட்டல் இவ்வாறு அறிவுக்களஞ்சியங்களை

உருவாக்குதல். என யாவும் மொழிவழிக்கல்வி முறையினால்தான் எளிமையாகவும், இனிமையாகவும் முழுப்பொருள் புரியும்படி கற்க முடியும் என்பதில் ஐயமில்லை.

*மொழி கற்பித்தலுக்கு இலக்கண அறிவு எங்ஙனம் துணை செய்யும்* மொழி கற்பிக்க வேண்டுமெனில், அதன் முழுமையான இலக்கண அறிவு இருந்தால்தான் எழுத்துப்பிழை சொற்பிழை வாக்கிய பிழை என யாவும் கலையப்பட்டு தெளிவாக விளக்கம் தர முடியும். பாடங்களின் முழுப்பொருளும் அறிந்து விளக்கமுடியும். திறன்கள் யாவும் வாயிலாக அமையும். இதனால் இலக்கணம் மொழி கற்பித்தலுக்கு பெரிதும் துணையாக அமைகிறது.

*மாணவர்களிடம் இலக்கிய சுவையுணர்வு ஆற்றலை வளர்க்க எத்தகைய கற்பித்தல் முறைகளைக் கையால்வாய்* இலக்கியம் கற்பிக்கும் போது பாடல்களை ஆடிப்பாடி, மகிழ்வுடன் கற்பித்தல் சிறப்பாக அமையும் கதை கூறி பாடங்களை நடத்துதல் நல்ல நடைமுறை உதாரணங்களைக் கூறி. இயற்கையும் இணைந்து பாடம் நடத்துதல். விளக்கமுறை, நடித்தல் முறை, செயல்முறை, ஆகிய முறைகளில் மாணவர்கட்கு நிலைவாரியாக பொருத்தியதை கற்றல், கற்பித்தல் சிறப்பாக அமையும்.

மேலும் செயல்வழிக் கல்விமுறை தற்போது சிறப்பாக அமைந்து செயல்படுகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

*விதி விளக்குதல் முறையில் இலக்கணப்பாடம் ஒன்றை எங்ஙனம் நடத்துவாய்* மாணவர்களே எளிதில் கண்டுணர முடியாத விதிகளை ஆசிரியர் விதிவிளக்கு முறையில் கற்பிக்கலாம். இலக்கண விதியொன்றைக் கூறி அதனை பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல் விதிவிளக்குமுறை எனப்படும். இம்முறையே பழங்காலத்தில் இலக்கணம் கற்பித்தலில் பின்பற்றப்பட்ட முறை மெய்யற்றுப்புணர்ச்சியில் ண, ன, க., ஈற்றுப்புணர்ச்சிகளைக் கூறும் விதி,

ண, ன வல்லினம் வரட்டரவு, பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு அவ்வழிக்குள்
அனைத்து மெய்வரினும் இல்பாகுமே.

எ.கா: வல்லினம் – மண் + குடம் மண்குடம். பொன் + குடம் – பொற்குடம்

வேற்றுமையுணர்ச்சி மெய், இடை – மணல் + மலை – மண்மலை, பொன் + வன்னம் – பொன்வன்னம்

ஆய்வறிசில் பொன் சிறந்தது : விண் சிறந்தது இவ்வாறு விதிவிளக்கமுறையில் சிறப்பாக விளக்கமுடியும்.

*உரைநடை பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்*

உரைநடை பாடம் கற்பிக்கும் போது அதன் நோக்கங்களாக கீழ்வருவணவற்றைக் கூறலாம்.

1) ஒலித்தல் முறையினை அறிதல், சொல், மரபு தொடர் பத்தி மரபுகளை அறிந்து தெளிவாக எழுத பழகுதல்.
2) மொழித்தூய்மை, சொல்லாட்சித் திறனை வளர்த்தல்
3) சொற்களஞ்சியப் பெருக்கம் அடைதல்
4) மரபுத் தொடர் அறிதல் பயன்படுத்துதல்
5) கருத்து வளம் உண்டாக்குதல்
6) வாய்விட்டு படித்தலில் பயிற்சி தொடர்பாகவும். பிழையின்றி பேசவும் எழுதவும் பழகுதல்.
7) நடைமுறை இலக்கணம் கற்றுக்கொள்ளவும் முடியும்.

என்ற நோக்கங்கள் நிறைவேற உரைநடைப் பயிற்றல் நல்லது.

*பாட நூலின் ஆக்கக் கூறுகளை மதிப்பிடுக*

பாடநூலின் ஆக்கக் கூறுகள் என்பது பாடநூல் எந்த அளவிற்கு மாணவர்கட்கு பயன்பாடு உடையதாக அமைகிறது என்பதே அவை கீழ் வரிசைபடுத்தப்படுகிறது.

1) பாடநூலின் கருத்துக்கள் எளிமை, தெளிவாகவும் உள்ளது.
2) அனைத்து தரப்பட்ட மாணவர்களும் படிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.
3) நிலைகட்கு உட்பட்டதாக அமைய வேண்டும் உயர்வு தாழ்வு இருக்கக் கூடாது.
4) தேவையான அளவிற்கு குறையாமலும் அதிகமாகாமலும் கருத்துக்கள் அமைவதே சரியான பாடநூல் என்கிறோம்.

*நோக்க அடிப்படைச் சோதனை* நோக்க அடிப்படைச் சோதனை என்பது புறவயப்பட்ட தன்மை என்று அழைப்பது உண்டு. இதற்க்கு ஒன்றிரு வரிகளில் விடையளிக்கும் வகையில் வினா அமைய வேண்டும் இதை யார் மதிப்பிட்டாலும் ஒரே முடிவைத் தருவணவாக அமைய வேண்டும். இதனையே புறவயப்பட்ட தன்மை என்போம்.

எ.கா : கோடிட்ட இடங்களை நிரப்புக, பொருத்துதல், சரியான விடைகளை தேர்ந்தெடுத்து எழுதுதல், விடுபட்ட வார்த்தைகளை, சொற்களை நிரப்புதல், மொழி பெயர்த்தல் என பல்வேறு வகையான நோக்க அடிப்படை சோதனை வினாக்களும் அமைப்பதனையே நோக்க அடிப்படைச் சோதனை என்பர்.

*தமிழ் கற்பித்தலில் துணைக்கருவிகளின் பங்களிப்பு குறித்து எழுது*

1) மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்க இவை பெரிதும் உதவுகின்றன.

2) கருத்துப்பொருள்களைக் காட்சிப் பொருளாக மாற்றுவதால் அவை கற்றலை எளிதாக்குகின்றது.

3) கற்றலில் வேகத்தை தருவதால் கற்றலுக்கான காலத்தை குறைக்கின்றது.

4) கற்றலை நிணைவை மிகுதியாக்கி மறத்தலைக் குறைக்கின்றன.

5) பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்தி கற்றலில் கவர்ச்சியையும் கவனத்தையும் உண்டாக்குகின்றன.

6) சுவையற்ற பாடத்தையும் சுவையுடையதாக்கிக் கற்பிக்க இவை உதவுகின்றன.

*குறையறி சோதனை குறைதீர் பயிற்சியும் குறிப்பிடுக*

*<u>குறையறி சோதனைகள் :</u>*

வகுப்பிலுள்ள எல்லா மாணவர்கட்கும் ஒரே மதிப்பெண்களை தேர்வில் பெறுவதில்லை இதற்கு காரணம் மாணவர்கள் சிலர் எளிதில் புரிந்து கொள்கின்றனர். மாணவர்கள் சிலர் கற்றுக் கொள்வதில் சிலருக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால் அவாக்ள் பெறும் மதிப்பெண்களில் வேறுபாடுகள் தெரிகின்றன. மதிப்பெண்கள் குறைவதற்கு பல காரணங்கள் இருக்கலாம் அதை ஆசிரியர்கள் குறைபாடுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை கண்டறிய வேண்டும். இதற்காக தயாரிக்கப்படும் சோதனை குறையறி சோதனைகள் குறையறி சோதனை எனப்படும்.

அடைவுச் சோதனை மாணவர்களின் நிலையை அறிய உதவுவதோடு மாணவர்களின் குறையை அறிய உதவுகிறது. மாணவர்கள் பாடத்திலுள்ள எந்த பகுதிகளில் தவறு செய்கிறார்கள் என கண்டுபிடிக்கலாம். ஒவ்வொரு வினாவிற்கான விடையை ஆராயும் போதும் இதற்கான நிலையை தெரிந்து கொள்ள முடியும். ஆகவே விடைகளை ஆராய்ந்த பிறகு மாணவர்களை தவறு செய்யும் பகுதிகளைக் குறித்துக் கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் மாணவர்கள் படும் இடர்பாடுகளை குறித்துக்கொள்ளலாம். எனவே ஆசிரியர்கள் முதலில் குறையறி சோதனைகளை தயாரிக்கும் முறையை அறிந்திருக்க வேண்டும்.

*<u>தயாரிக்கும் முறை :</u>*

1) எந்த பகுதியில் எந்த குறை அல்லது தடைகள் உள்ளன என வரிசை படுத்திக்கொள்ள வேண்டும்.

2) ஒவ்வொரு பகுதிக்கும் தடைகளுக்கு ஏற்ப வினா அமைத்துக்கொள்ள வேண்டும். புறவய வினாக்களாக இருந்தால் எளிதில் கண்டுபிடிக்கலாம்.

3) ஒவ்வொரு பகுதிக்கும் கருத்திற்கும் ஏற்பவும் குறைகளுக்கு ஏற்பவும் நான்கு (அ) அதற்கும் மேற்பட்ட வினாக்கள் தயாரிக்கலாம்.

4) இவ்வாறு தயாரித்த வினாக்களைக் கொண்டு வினாத்தாள் தயார் செய்யலாம். வினா வடிவமைப்பில் கால அளவும் தேவையில்லை.

5) வினாத்தாள் வினியோகித்து விடைகள் எழுதியபின் விடைத்தாள்களை சரிபார்க்க வேண்டும். இதற்காக குறையறிகுறிப்பு தயாரிக்க வேண்டும். (அ) அட்டவணை தயார் செய்ய வேண்டும். அட்டவணை தொடர்ந்து காணலாம்.

x தடை

| மாணவர் பெயர் | கடினம் 1<br>1 2 3 4 | கடினம் 2<br>1 2 3 4 5 | கடினம் 3<br>1 2 3 4 | கடினம் 4<br>1 2 3 4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| R | √ x x √ | x x √ x √ | x x x √ | x x √ x | 12 |
| S | √ x x √ | x √ x x √ | x x x √ | x x x √ | 11 |
| T | √ x x x | x √ x x x | x √ x x | √ √ x x | 12 |
| U | √ x x x | x x x x √ | x x x √ | x x √ x | 13 |
| | 0442 | 42342 | 4341 | 3323 | 48 |

இவ்வட்டவணையிலிருந்து ஒவ்வொரு மாணவனுக்கும் உள்ள கடினம் (அ) தடைகள் அவன் செய்த தவற்றைக் கணக்கிடும் போது தெரியவரும் அதபோன்று ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிப்பதை வைத்து முதல் வினாவிற்கு எத்தனைபேர் தவறு செய்துள்ளனர் இரண்டாவதில் எத்தனைபேர் தவறு செய்துள்ளனர் என வரிசையாக எல்லா வினாக்கட்கும் கண்டுபிடிக்கலாம். அதன்பிறகு அக்குறைகளை தீர்க்க மீண்டும் மாணவர்கட்கு பாடதை குறிப்பாக தவறு செய்த பகுதியை நன்றாக கற்பிக்க வேண்டும். மேலும் சில பயிற்சிகள் கொடுக்கலாம். வெவ்வேறு கற்பித்தல் முறைகளை பின்பற்றலாம். பலமுறை மீண்டும் மீண்டும் கற்பிக்கலாம். இனிமேல் இக்கருதுறைகளில் தவறு செய்யமாட்டார்கள் என தீர்மானிக்கும் வரை கற்பிக்கலாம். இதனை குறை தீர்க்கக் கற்பித்தல் எனலாம்.

*மொழியை கற்றுக் கொள்வதில் பங்குபெறும் தேவை, ஆர்வம் ஊக்குவித்தல் ஆகிய கூறுகளைப் பற்றி விளக்குக?*

மொழியைக் கற்றுக் கொள்வதில் நிறை கூறுகள் உட்கூறுகள் பங்கு பெறும் துணைச் செய்கின்றன. அதில் முக்கியமாக தேவை, ஆர்வம், ஊக்குவித்தல் என்ற இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையவை.

*<u>தேவை :</u>*

தேவை என்பது மாணவர்கட்கு எந்த வகுப்பிற்கு எந்த அளவிற்கு திறன்கள் கற்பிக்கப் பயன்களாக திறன்கள் தேவை. எனவும் அறிவுக்களஞ்சியங்கள் மேம்படுத்த வேண்டும் எனவும் நாம் கருத்தில் கொண்டு மொழிப் பாடத்திட்டத்தை தயாரிக்க வேண்டும். பள்ளிகளின் நிலை உயர்நிலை, இடைநிலை, தொடக்கநிலை என யாவற்றிற்கும் ஏற்ப எது தேவை எது என அறிந்து பாடத்திட்டம் அமைப்பினை மனதிற்கொண்டு செயல்பட்டால், மாணவர்கட்கு ஏதுவாக அமையும். இந்த தேவை என்ற எண்ணம் மாணவனுக்கு மனதில் புரியவேண்டும். கற்றுக் கொள்வது அவசியம் என்று தோன்றும். கற்பதன் பயன் இன்னது என்றும் அறியச் செய்தால் தேவையை உணருவான். எனவே கற்றுக் கொள்வதில் தேவை என்ற அடிப்படை கூறுகள் முக்கியத்துவம் வாய்க்கிறது.

*ஆர்வம் :*

ஆர்வம் என்பது மாணவர்களிடம் இன்ன பாடத்தை கற்க வேண்டும் என்ற ஆர்வம் மேம்பட வேண்டும். இவ்வகையில் மாணவர் ஆசிரியர் இந்த இரு நிலைகளிலும் (கற்பித்தல், கற்றல்) ஆர்வம் தேவைப்படுகிறது. மேலும் பாடத்திட்டமும் மாணவனின் மனத்திற்கு ஆர்வத்தை ஏற்படுத்த வல்லனவாக அமைதல் வேண்டும். ஆசிரியர் பாடம் நடத்தும் விதம் தன்சுய ஆர்வம் மிகுதியுடன் நடத்தும்போது பாடம் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மாணவர்கட்கு மிகுகிறது. இவ்வாறாக ஆர்வம் என்பது பாடப்புத்தகம், கற்றல் கற்பித்தல், என மூன்று நிலைகளும் உறுதுணையாக அமைதல் வேண்டும். அவ்வாறாயின் ஆர்வம் கற்றுக் கொள்வதில் முக்கிய கூறாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*<u>ஊக்குவித்தல் :</u>*

பாடம் நடத்தும் போது மாணவர்கட்கு புரிந்ததா என்பதை அறிய வினா கேட்டு விடை வரவழைக்கும் போது அவன் கூறியபதில் முழுதும் சரியாக இருந்தால் அதிகபட்ச பாராட்டுதலை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பாதி பதில் தந்தாலும் ஊக்குவித்தல் அடிப்படையில் வரவழைக்க வேண்டும். இவ்வூக்குவித்தல்

1) கைத்தட்டுதல் (மாணவர் அனைவரும்)
2) வார்த்தைகளால் பாராட்டல் (ஆசிரியர்)
3) மாணவனை தட்டிக் கொடுத்தல்
4) தலை அசைத்து ஏற்புடைமையை காட்டல்
5) பரிசுப்பொருட்களை தருதல் என பலவகையாக ஊக்குவித்தல் அமைகிறது. இதனை ஏற்ற இடத்தில் உபயோகப்படுத்தினால். கற்றுக்கொள்வதற்கு உற்ற கூறுகளாக அமையும்.

இவ்வாறு மேற்கண்ட தேவை, ஆர்வம், ஊக்குவித்தல் யாவையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக அமைகிறது. மொழி கற்றலுக்கு முக்கிய கூறுகளாக அமைகிறது.

*தமிழ்மொழி கற்பித்தலில் கையாளப்படும் புதிய உத்திகள்* தமிழ்மொழி கற்பித்தலில் புதிய முறைகளாக நாம் கருதுவது நடிப்புமுறை, விளையாட்டுமுறை, செயல்திட்டமுறை, ஆய்வுக்களமுறை, கணினிவழி காட்சிக் கேள்விமுறை என தற்போது மிக்க பயன்பாடுடைய முறையில் கற்பித்தல் எளிதாகின்றது. இனிமையாகின்றது.

மாணக்கர்களை மையமாக கொண்டு அமையம் தற்போதைய கல்வி கொள்கை பல்வேறு புதிய கோணங்களில் கற்பிக்க துணை செய்வனவாக அமையும். அவை.

*விளைாட்டுமுறை :*

விளையாட்டு முறைப்படி தமிழ் கற்பிக்க 1 முதல் 5 வரை மிக சிறப்பாக அமையும். விளையாடும் போதே நிறைய கருத்துக்களை புரிந்து கொள்ளும் வகையில் தொடக்க நிலை, நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்கட்கு பெரிதும் பயன்படும்.

1) படங்களையும் பெயர்களையும் பொருத்துதல்
2) பொருள்களைப் பார்த்து பெயர் எழுதச் சொல்லுதல்
3) பொது எழுத்தோடு சேர்த்து படித்தல்.
4) மாறியுள்ள எழுத்துக்களை பொருள் அமைய மாற்றி அமைத்தல்.
5) எழுத்துக் கூட்டல் விளையாட்டு.

*நடுநிலைப் பள்ளி மாணவர்கட்கு :*

1) இரட்டைக் கொம்பு சேர்த்து சொல்லாக்குதல்.
2) சொற்களை முறைமாறி கொடுத்து வாக்கிமாக ஆக்குதல்.
3) எதிர்ச்சொல், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல்
4) அன்னியனைக் கண்டுபிடித்தல், வேறுபடுத்துதல்.
5) படம் ஒன்றைக்காட்டி ஏற்ற தலைப்பு தரச் சொல்லுதல்.
6) கதை அமைத்தல் , ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல்.
7) விடுகதைகள் அமைத்து பதில் பெறுதல்.

இவ்வாறாக தொடக்க நிலை, இடைநிலை பள்ளி மாணவர்கட்கு விளையாட்டு முறையில் மொழியை கற்றுக் கொடுக்கலாம்.

*நடிப்பு முறை :*

நடிப்பு முறை என்பது இடைநிலை உயர்ந்த மாணவர்களை ஏற்ற பாடத்திற்கு நாடகமாக பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல் நல்ல கற்றலை தரும். கற்பனை குழந்தைகட்கு ஏற்பட்டு தானும் நடித்து பலவற்றைக் கற்றுக் கொள்ளும். உதாரணமாக மரக்கட்டை, ரயில்வண்டியாக, நாற்காலியாக, கப்பலாக, சிறுவனோ, பால்காரன், கடைக்காரர் என்று நடிப்பதில் பேரார்வம் காட்டுவார்கள். அவ்வகையில் உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு தேவையான பாடத்தை நடிப்பு முறையில் நடத்திக் கற்றுக் கொடுக்கலாம்.

*செயல்திட்டமுறை :*

மாணவர்கள் தற்போது செயல்திட்ட முறையில் படிக்கிறார்கள். S.S.A. திட்டம் அவ்வாறு மாணவர்கட்கு சிறப்பாக செயல்படுகிறது. இஃது மாணவர்களை தன் சுய விருப்பப்படி செயல்பட மனம் விழைகிறது. இதனால் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெற இந்த முறை உதவுகிறது. மேலும் இதில் ஆர்வம் அதிகமாகிறது. சிறுசிறு திட்டம் நிறைவேறும் போது மனதில் உற்சாகம் எழும் இது மேலும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தை தூண்டுகிறது. இது சிறந்த கற்றல் முறை.

*ஆய்வுக் கள முறை :*

இஃது கற்றலை அதன் இடத்திலே சென்று நேரடியாக (களம்) செயல்களை அறிதல், கோயில் கலை, வரலாறு, சுற்றுலாத் தளங்கள், நூல் நிலையம், ரயில் நிலையம், தபால் நிலையம், இப்படி பல்வேறு பொது விபரங்களை அறிந்து கொள்வது சிறந்த ஒரு கற்றலாகவும் மொழிபாடத்திற்கு அமைகிறது.

*கணினி முறை (காட்சிக் கேள்வி) :*

கணினி முறையில் பாடப்பகுதியில் உருவாக்கி திரையில் வீழ்த்தி காட்சிக் கேள்வி வகுப்பை நடத்துதல் மிகச் சிறந்த மாணவர்கட்கு மிக சிறந்த கவனத்தை தரவல்லதாக அமைகிறது. தேவையானபோது மீண்டும் நாம் உபயோகித்து பார்க்கலாம். இதில் பாடப்பகுதி அனைத்தும் விரிவாக வடிவமைக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை தற்போது விரிவடைந்து விரிச்சுவல் டீச்சிங் என்ற அளவிலே மேலும் விரிவடைந்துள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதில் பல்வேறு சிறந்த புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. இவையாவும் சிறந்த புரிதலையும் அதிக கவனம் ஆர்வத்தையும் தருகிறது.

*மொழி*யை சிறப்பாகக் கற்பிக்க *ஆசிரியர்க்கு மொழியியல் அறிவு தேவை* மொழியியல் என்பது மொழி பற்றிய முழுமையான செய்திகள் மொழியினுடைய தோற்றம் வளர்ச்சி பயன்பாடுக அனுபவங்கள் நுகர்வுகள் அதன் இலக்கண, இலக்கிய அறிவு, இலக்கிய நயம் உணர்தல், இதன் வாயிலாக மொழியின் மீது ஆர்வம் பற்று ஏற்படுத்திக் கொண்டு மாணாக்கர்கட்கு மொழியை கற்பித்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பது திண்ணம்.

தோற்றமும் வளர்ச்சியும் :

மொழியின் தோற்றம், மிகத் தொன்மையானது இனிமையானது, இளமையானது என்பது மொழி ஆசிரியர்கட்கு விளங்க வேண்டும். அப்போதுதான் அதன் மீது முழுமையான கவனம் செல்லும். மேலும் தேனுடைய வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை எங்ஙனம் பல வழிகளிலும் வளர்ச்சியுற்றது என்பதனையும் அறிந்து இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு முழுமையான உணர்வுடன் கற்றுக் கொடுக்க முடியும் என்பதும் திண்ணம்.

*<u>இலக்கண அறிவு :</u>*

இலக்கணம் அறிந்தால்தான், இலக்கியம் அறிய முடியும் என்பது மொழி நூலாரின் கருத்தாகும். எனவே தமிழாசிரியர் தமிழில் இலக்கணமான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கண அறிவு பெற்றவராய் இருத்தல் அவசியம். எழுத்தின் தோற்றம் பிறப்பு முறையை, சொல்லின் தோற்றம், புணர்ச்சி தொடர்கள், என்பன போன்ற யாவையும் அறிந்தவராயிருத்தல் அவசியம் ஆகும்.

*<u>இலக்கிய அறிவு :</u>*

கதை, கட்டுரை, கவிதை, இயற்கை கற்பனை, அழகுணர்வு, நகைச்சுவை போன்ற பலவகையான திறன்களை உள்ளடக்கியது. இலக்கியம். எனவே இதன்மீது ஆர்வம் உண்டாக வேண்டும். அப்போதுதான் மாணவர்கட்கு கற்பிக்கும் போது முழு ஆர்வத்துடன் கற்பிக்க இயலும் எனவே இலக்கிய நயம் அறிதல் என்பது மிக மிக அவசியம மொழியாசிரியர்கட்கு.

*<u>அனுபவங்கள் :</u>*

அனுபவங்கள் நுகர்வுகள், தமிழாசிரியருக்கு இருந்தால்தான், அந்த மொழி பற்று உண்டாகும். பற்றுதான் மற்றவர்கட்கு கற்பிக்கும் போதும் அதே உணர்வு வரவேண்டும். தான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற மனம் விழையும்.

*<u>பயன்பாடுகள் :</u>*

மொழி கற்றால் இன்ன பலன்கள் அதாவது பண்பாடு, ஒழுக்கம், ஆக்க சிந்தனை, இறை உணர்வு, வாழ்க்கைப் பாடம், பிறருக்கு உதவும் நல்ல எண்ணம், என எல்லாம் பயன்பாடுகளாக அமையும் என்பதையும் ஆசிரியர் கற்ப்பிக்கும் போது அறிந்தால் மட்டுமே மாணவர்களும் உணர்த்த முடியும்.

இவ்வாறு மேறச்சொன்ன (அனைத்தும்) மொழியியல் கருத்துக்கள் முழுமையாக அறிந்தால் மட்டுமே சிறப்பாக கற்பிக்க முடியும். என நிறுபணமாகிறது.

*தமிழ் மொழியின் தொன்மை பற்றி எழுதுக*

தமிழ் மொழி ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாக கருதுகினற்ன. இதன் இலக்கண, இலக்கியங்கள் மிகவும் தொன்மை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

*ஒலி எண்கள்* ஒலியெண்கள் என்பன, மொழியமைப்பை அடிப்படையாகக் கொண்டு எல்லா எழுத்துகட்கும் ஒலி அமைப்பால் ஒருங்கிணைத்து குறியீடுகள் கொடுத்து உச்சரிக்க வேண்டும். அஃது ஒலியெண் எனப்படும்.

*மொழியின் பயன்களை* 1) மற்றவர்களிடம் தொடர்பு கொள்ள மொழி பயன்படுகிறது.

2) பிழையில்லாமல் பேசுவதற்கும் எழுதுவதற்கும் மொழி பயன்படுகிறது.

3) கற்பித்தலுக்கு மொழி அவசியமாகிறது.

4) தன் நுகர்வுகளை எடுத்து இயம்ப மொழி பயன்படுகிறது.

*நாட்டின் மொழிக் கொள்கையை தீர்மானிக்கும் காரணிகள்* 1) மொழி பேசும் மகக்ளின் கருத்து முக்கிய காரணியாகும்.

2) அரசின் கொள்கை முடிவுகள் அடுத்த காரணியாகும்.

3) அரசியல் கொள்கை வேறுபாடுகள் இதற்கு காரணங்களாக அமைகின்றன.

4) பள்ளி, கல்வி, நிர்வாகத்தினர்களின் மனப்போக்கு என பல காரணிகள் பேசப்படுகின்றன.

*முதன் மொழி கற்றலுக்கு பயன்படும் பொதுவான உளவியல் கொள்கைகளைக் கூறுக*

1) குழந்தை மொழியை கற்கும் நிலை மூன்று வகை.

1) அழுகை நிலை 2) செங்கிரை நிலை 3) பேச்சு நிலை

குழந்தை பிறந்தவுடனே அழுகிறது. அஃது ஒரு நோக்கத்திற்காகவே.

செங்கிரை நிலையிலே சில சப்தங்களை எழுப்புகிறது. பேச்சிற்கு அடிப்படை முயற்சி நிலைகள்.

அது வளர்ந்து பேச முற்படுவது சிறு சிறு வார்த்தைகள் பேச்சு நிலை என்போம். இதுவே உளவியல் அடிப்படைக் கற்றல் ஆகும்.

*செய்யுட்களை மனப்பாடம் செய்வதன் நிறைகுறைகளை*

*நிறைகள் :*

1) செய்யுட்களை மனப்பாடம் செய்வதால் மனனம் சக்தி அதிகமாகிறது.
2) ஒருமுக சிந்தனை எழுகிறது.
3) தேவையான பாடப்பகுதியை மட்டும் தேவையான இடத்தில் வெளியிட முடியும்.
4) சத்தத்துடன் எதுகை மோனையுடன் அமைவதால் செய்யுளை மணனம் செய்வது சிறப்பு.

*குறைகள் :*

1) காலம் அதிக விரையமாகும். எல்லாவற்றையும் மணனம் செய்வது கடினமாகும்.
2) புரிந்து கொள்ளும் ஆற்றல் (திறன்) இல்லாமல் குறைந்துவிடும்.
3) மறந்துவிட்டால் அதை பற்றி எழுதவோ பேசவோ முடியாததாகிவிடும்.
4) கவனம் குறைந்துவிடும்.

*தமிழ் கற்பித்தலின் வானொலியின் பங்கி*

வானொலி எழுத்துக்களை உச்சரித்து மொழியினை கற்றுத்தருகின்றது. குழந்தைகட்கு கதை, பாட்டு, நாடகம், இவை கொண்டு மொழியை (தமிழ்) கற்றுத் தருகிறார்கள். இதை கேட்டும் மாணவர்கள் தங்களின் மொழியை வளர்க்க முடியும்.

*பயிற்றுமொழி தமிழாய் இருப்பின் கிடைக்கும் பயன்கள்* 1) பயிற்று மொழி தமிழாயிருத்தல் கற்றலுக்கு எளிது.

2) பொருள் புரிந்து கொள்ளல் சிறப்பானதாகும்.

3) கற்றல், கற்பித்தல் இரண்டும் செம்மையுடன் நடக்கும்.

4) தாய்மொழியாதலால் ஈடுபாடும் விருப்பமும் அதிகம் இருக்கும். அதனால் கற்றல் பயன் அதிகமாக இருக்கும். தடைகள் ஏதும் வராது.

*செயலாய்வு*

மொழியில் கற்கும் பாடப்பகுதியை தன் செயலைக் கொண்டு தானே ஒரு நிலையை நிறுபணம் செய்யச் சொல்லுதல். சரியா, தவறா என்ற உறுதிப்பாட்டை ஆய்வின் வழி செயல்படுத்துதல் செயலாய்வு எனப்படும்.

*நல்ல ஆய்வின் நற்பண்புகள்*

1) நல்ல ஆய்வு சிந்தனை இருந்து கொண்டேயிருத்தல்.
2) பல்துறை அறிவு அவசியம்.
3). மொழி பெயர்க்கும் திறன் தேவை.
4) சொற்களஞ்சியம் பெருக்கம் அதிகம் தேவை.
5) தேர்ந்த இலக்கண இலக்கிய புலமை தேவை,
6) பொதுமையான கொள்கை சிந்தனை செயல்பாடு தேவை.

*மொழி வளர்ச்சிக்காக சுற்றுப்புறச் சூழலின் பங்கினை விவரி*

மொழி வளர்வதற்கு சுற்றுபுறம் நம்மைச்சுற்றி உள்ளவர்கள், மொழி அறிந்தவர்களாக அமையவேண்டும். அவர்களிடம் ஆர்வம் மிக்கவர்கள் நமக்கு உறுதுணையாக இருப்பார்கள் வட்டார வழக்கில் மிகுதியில்லாமல் தூய தெளிவான மொழி நடை பேசுவோர் அதிகம் இருப்பவராயின் நமக்கும் நன்மை வளரும் சான்றோர் நிறைந்த நாடு (ஊர்) செழிக்கும் என்பது பழமொழி. அதுபோல் சுற்றுப்புறச் சூழல் மொழி வளர்ச்சிக்கு பெரிதும் துணை செய்கின்றது.

*ஒலி உறுப்புகள் யாவை அவற்றின் செயல்பாடுகள்*

ஒலி உறுப்புகள் என்பன உதடு, நாக்கு அன்னம், இவைமுறையே கீழ் இதழ், மேலிதழ், நுணிநா, இடைநா, கடைநா, மேலண்ணம், கீழண்ணம், நா விளிம்பு, என்ற உறுப்புகள் ஆகும். இதில் இதழ் குவிதல் விளித்தல் ஒன்றன் மேல் ஒன்று அமுக்குதல், என்ற முயற்சியும், நாக்கின்

முயற்சியாக நுணிநா வருடல், நாவிளிம்பில் அடுக்குதல். தடவுதல், ஒட்டுதல் என்ற முறையில் முயற்சி அமைகிறது. அன்னத்தின் முயற்சியாக அங்காத்தல், மேல் கீழ் ஒட்டுதல், அசைதல், முயற்சியாக அமைகிறது.

*மொழியாசிரியர்க்கு மொழியியல் அறிவு தேவை* மொழியாசிரியர் மொழியியல் அறிவு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணமும் அதன் தோற்றம் வளர்ச்சியும் செயல்பாடுகளும் அறிந்திருக்க வேண்டும். மொழி என்ற எழுத்துக்களின் தோற்றம், பிறப்பு, முயற்சி, சொல்லின் தோற்றம் அதன் பல்வேறு பண்புகள் மற்றும் வளர்ச்சி பொருள் அகம் புறம் என அனைத்தும் யாப்பு, புதிதாக நூல் இயக்கும் இயல்பு அணி அழகு சேர்க்கும். படிப்பினை இப்படி இலக்கண இலக்கிய புலமை யாவும், மொழியியல், எனப்படும் இது மொழியாசிரியர் அவசியம் தேவைப்படுகிறது. அப்போதுதான் சிறப்பாக இருக்கும்.

*நாடு பின்பற்றும் மும்மொழிக் கொள்கை யாது அதன் நிறை குறைகள்* மும்மொழி என்பது, தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மூன்றும் கற்றுத் தருதல். எங்கெல்லாம் நடைபெறுகிறதோ அதை மும்மொழிக் கொள்கை உடைய நாடு என கூறலாம். அவ்வாறாக நமது தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை கட்டாயமாக்கப்படவில்லை. இரு மொழி மட்டுமே கட்டாயமாக்கப்பட்டது. மூன்றாவது மொழியான இந்தி விருப்பப்பாடமாக யார் வேண்டுமானாலும் படிக்கலாம் என்பதே இம்மொழி CBSC நவோதையாபள்ளி, கேந்திர்ய வித்யாலாய பள்ளி ஆகிய பள்ளிகளில் விருப்பம் பாடமாக அமைந்துள்ளது. மேலும் இந்தி பிரச்சார சபா மூலமாகவும் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறு மும்மொழிக் கொள்கை இருந்தது.

*பிற மொழித் தாக்கம் தமிழ்மொழி கற்பித்தலை எங்ஙனம் பாதித்துள்ளது.*

பிற மொழித் தாக்கம் தமிழ் கற்பித்தலை வெகுவாக பாதித்துள்ளது. தமிழ் இலக்கண, இலக்கியம் ஆங்காங்கே வடமொழியும் கலந்துள்ளது அறிய முடிகிறது. தூய தமிழில் சில ஒலி அமைப்புகள் அமையவில்லை. தமிழ் எழுத்துக்களோ வடமொழி ஓசையை சில இடங்களில் பெறுகிறது. அதனால் இலக்கண, இலக்கியங்கள் பெரும்பாலும் தாக்கம் காணப்படுகிறது. அதுபோலவே ஆங்கில வார்த்தைகள் தற்போது அதுவே தமிழ் வார்த்தை போலவே பழகிவிட்டது.

இவ்வாறு ஆங்கில வார்த்தைகள் மிகுதியாக தமிழ் வார்த்தைகளோடு கலந்துவிட்டன. தமிழில் சொன்னால் புரியமாட்டேங்கிறது என்று சொல்லும் அளவிற்கு பிறமொழி தமிழ்மொழியோடு தாக்கம் ஏற்பட்டுள்ளத அறியப்படுகிறது.

*நடிப்பு முறை தமிழ் கற்பித்தலுக்குப் பயன்படுமா*

நடிப்புமுறை தமிழ் இலக்கிய நாடகம் உரைநடை நாடகம் ஆகியவைகள் நாடக முறைகளை நடிப்பு முறையில் கற்பித்தல் மாணவர்கட்கு எளிதில் புரியும்.

*__நிறைகள் :__*

1) தாங்களே நடிப்பதனால் உற்சாகமாக தங்களுக்குரிய பகுதிகளை மனனம் செய்வார்கள்.
2) நடிப்பு முறையில் அதிக கவனம் இருக்கும்
3) சிறந்த கவர்ச்சி, அதிக கவனத்தை தரும்.
4) கதை போன்றவை எளிதில் புரிய வைக்கலாம்.

நிறைகள் போலவே குறைகளும் காணலாம்.

*__குறைகள் :__*

1) அனைத்து பாடத்தையும் நடிப்பு முறையில் கற்பிக்க இயலாது.
2) காலம் அதிகம் செலவாகும்.
3) பொருளாதாரம் அதிகம் செலவாகும்.
4) அனைத்து பாடங்களையும் இந்த நடிப்பு முறையில் கற்பிக்க இயலாது.
5) குறிப்பிட்ட சில மாணவர்கள் நடிக்க பிற மாணவர்கள் தங்களுக்கு வாய்ப்பு இல்லை என வருந்துவர். எனவே நடிப்பு முறை குறிப்பிட்ட அளவு பயன்படும்.

*விரிவுரை முறையின் நிறை குறைகளை* விரிவுரை மூலம் பெரும்பாலும் கல்லூரிகளில் நடத்தப்படுகிறது. இதன் நிறைகுறைகளைக் காண்போம்.

*__நிறைகள் :__*

1) விரிவுரை முறையில் கல்லூரி அளவில் மட்டுமே நடத்த முடிகிறது.
2) மாணவர்களை சற்று கூர்மையாக கவனிக்க இயலும்.
3) ஒன்றிற்கு சிறப்பான விளக்கம் அளிக்க இந்த விரிவுரை முறை சிறப்பாகும்.

4) ஆசிரியர்க்கும் இம்முறையில் நல்ல நிறைவு கிடைக்கும்.

*குறைகள் :*

1) ஆசிரியர் மட்டுமே பேசிக்கொண்டிருக்க மாணவர் அமைதியாக கேட்டவண்ணம் இருப்பர் இது மாணவர்கட்கு தூக்கத்தை ஏற்படுத்தும்.

2) குறிப்பிட்ட பகுதியில் ஆசிரியரின் கருத்துக்கள் மட்டுமே இடம்பெற வாய்ப்பு உள்ளது.

3) மற்ற முறைகள் போல மாணவர் மையம் என்பதில் பொருத்தம் குறைவாகவே இருக்கும்.

4) விளக்கம் மட்டுமே குறைந்த அளவு கவனம் இருப்பதாக உளவியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

*நடைமுறை இலக்கணம்*

தமிழில் இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என ஐந்து வகைப்படும். இவை முறையாக கற்றுத் தரப்படுவது. நடைமுறை இலக்கணம் எனப்படும். அதாவது முதலில் எழுத்து பற்றியும். பின்னர் சொல் பற்றியும் விரிவாக அறிந்து கொண்டு பிறகு அகப்பொருள் புறப்பொருள் பற்றி பிறகு யாப்பு, அணி என முறையாக கற்றல் கற்பித்தல் நடைமுறை இலக்கணம் எனப்படும்.

*பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதன் பொது நோக்கத்தினை*

பள்ளிகளில் தமிழ் கற்பித்தலின் பொது நோக்கங்கள் பல திறன்களை வளர்த்தல், இலக்கிய நயமுடன், சிந்தனையை வளர்த்தல், சொற்களஞ்சியத்தை பெருக்குதல், எண்ணத்தை வெளியிடல்ர, படைப்பாற்றலை வளர்த்தல், வாழ்க்கை நுகர்வுகளை எடுத்து இயம்பல், கற்பனைத் திறனை வளர்த்தல், மக்கள் பண்பாட்டை அறிதல் ஒழுக்க உயர்வை வலியுறுத்தல், நாட்டுப்பற்று, மொழிப்பற்றை ஏற்படுத்துதல். இறை உணர்வினை ஊட்டல் சமூக பண்பாட்டினை மரபினை அறியும் கருவி என இவையாவும் பொது நோக்கங்களாக அமையும். இவற்றை வரிசையாகக் காண்போம்.

*திறன் வளர்த்தல் :*

அடிப்படை திறன்களாக பேசுதல், எழுதுதல், படித்தல், கேட்டல், என இவை கல்வியை உள்வாங்குதல் வெளியிடல் என இருவகையிலே அமைகிறது. இவை மொழி கற்பித்தலுக்கு கற்றலுக்கும் அவசியமாகிறது.

*இலக்கிய நயமுணர்தல் :*

இலக்கிய அறிவு மிகுதியாக ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு இலக்கியத்தின் சுவையும் மிகுதியாக மாணவர்கள் உணரும் வண்ணம் ஏற்படுத்த வகை செய்ய வேண்டும்.

சிந்தனையை வளர்த்தல் :

சிந்தனை என்பது முன்பு படித்த கருத்திலிருந்து புதிய சிந்தனை தோற்ற, வழிபிறக்கிறது. பல பார்த்த கேட்ட செய்திகளில் இருந்து நமது சிந்தனைகளை ஒப்பிட்டு பார்க்க இலக்கிய இலக்கண அறிவு வளர்க்க வேண்டும். அதன்மூலம் மொழி ஆர்வம் மேலோங்கும் இங்ஙனம் சிந்தனை தூண்ட பள்ளிகள் மொழி பயிற்ற வேண்டும்.

*சொற்களஞ்சிய பெருக்கம் :*

சொற்கள் மிகுதியாக பேச, எழுத, படிக்க, வேண்டும் என்ற நோக்கில் சொற்களை பயன்படுத்த வேண்டும். பொருள் அறிய வேண்டும். புதுப்புது சொற்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு சொற்களஞ்சியத்தை பெருக்க வழிவகுக்க வேண்டும்.

*எண்ணத்தை வெளியிட :*

எண்ணம் என்பது நமது முழுமையான கல்வியறிவை பற்றி நாம் என்ன நினைக்கிறோம். புரிந்து கொண்டோமோ அதை மற்றவர்களிடம் எளிமையாக வெளியிடும் நிலையில் சிறந்த கருவியாக மொழி பயன்படுகிறது.

*படைப்பாற்றல் வளர்த்தல் :*

படைப்பாற்றல் என்பது கற்றலிருந்து புதிதாக ஒன்றினை (படைத்தல்) உருவாக்குதல் என பொருள்படும் எனவே இலக்கிய, இலக்கண அனுபவத்தைக் கொண்டு புது மாதிரியான இலக்கியம் படைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

*வாழ்க்கை நுகர்வுகளை :*

அன்றாட வாழ்க்கை நுகர்வுகளை எடுத்து கூறுதல் தமிழ் மொழி பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. அப்போதுதான் உள்ளதை உள்ளவாறு நம்மால் மற்றவர்கட்கு எடுத்துக் கூற இயலும் அந்த திறமை வளர்த்துக் கொண்டால் நம்மிடம் மொழிப்புலமை மேம்படுகிறது எனலாம்.

*கற்பனைத்திறன் :*

தன்னிடம் உள்ள கருத்திலிருந்து மேலும் சில உயர்ந்த கற்பனையில் நாம் இருக்க வேண்டும். இது ஆக்கக் கற்பனை அறிவுசார் கற்பனை என பல வகைப்படும். இந்த கற்பனை நாளை செயல்வடிவம் பெறும்போது மகிழ்ச்சி அளிக்கும். எனவே கற்பனைத் திறனை வளர்க்க வேண்டும்.

*மக்கள் பண்பாடு :*

தமிழ் மொழி இலக்கண, இலக்கியம் மக்களுக்கு மொழி அறிவை வளர்ப்பதோடு மட்டுமில்லாது வாழ்வியல் கருத்துக்களை அளித்து பண்பாட்டுடன் நடந்து கொள்ள தமிழ்மொழி வாப்பளிக்கிறது. பண்பாடு என்பது மாறாத ஒன்று நாகரிகம் என்பது காலத்துக்கு காலம் மாறக் கூடியது. எனவே மாறாத தன்மை கொண்ட பண்பாட்டை முழுவதுமாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*ஒழுக்க உயர்வை அறிதல் :*

கற்றோர்க்கு சென்றமிடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கிற்கு இணங்க கற்பதினால் ஒழுக்கம் மேலோங்குகிறது. அதுவே உயர்வை அளிக்கிறது என்ற உண்மையினை மாணவர்கட்கு அறியச் செய்கிறது. இதனால் கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே உயர்வாகக் கருதப்படுகிறது.

முடிவுரை :

இவ்வாறாக பொது நோக்கங்கள் நிறைவேற பள்ளிகள் தமிழ் கற்பிக்க வேண்டியுள்ளது அவசியமே என்பதை தெளிவாக்குகின்றன.

*பாட நூல்கள் மதிப்பீடு செய்யும் போது மனதில் கொள்ளவேண்டிய கருத்துகள்* பாடநூல்களை மதிப்பீடு செய்யும்போது நாம் மனதில் கொள்ள வேண்டிய கருத்துகள் நிறைய உள்ளன அவைகள் வரிசையாக தரப்படுகின்றன.

1) பாட நூலின் தலைப்புக்கு ஏற்றவாறு உள்ளே உள்ள தகவல்கள், சரியாக பொருத்தமாக உள்ளதா என அறியவேண்டும்.

2) நூலிற்கு பத்து அழகுகள் சொல்லப்பட்டன அவை சரியாக பின்பற்றப்பட்டவையா என அறிதல்.

3) சொற்கள் விடையாக விரிவாக எழுதுதல் தேவையா.

4) ஐயம் திரிபுர விளங்க வைத்துள்ளதை என ஆய்தல்.

5) வாசிப்பவர்கட்கு இன்பத்தை தருவனவாக அமைதல் வேண்டும்.

6) நல்ல சொற்களை கையாண்டுள்ளனரா என பார்த்தல் அவசியம்.

7) நல்ல சந்த இன்பம் உண்டாகும்படி அப்புத்தகம் அமைய வேண்டும்.

8) படிக்கப்படிக்க நல்ல இன்பம் தருதல் போன்று இருத்தல் அவசியம்.

9) சொல்லப்பட்ட கருத்துக்கள் முறையாக வரிசையாக சொல்லப்பட்டிருத்தல் அவசியம்.

10) உலக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் கருத்துகள் அமைய வேண்டும். யாரும் மறுப்புச் சொல்லா வண்ணம் சொல்லப்பட வேண்டும்.

11) சிறப்பான பொருளைக் கொண்டதாக அமைய வேண்டும்.

12) ஆங்காங்கே தேவையான உதாரணங்கள் அமைய விளக்கமாக புரியும்வண்ணம் அமைந்துள்ளதா என ஆராய வேண்டும்.

13) இவ்வாறு இலக்கணம் கூறப்பட்ட நூல் அழகும் பத்தும் பொருந்துமாறு அமைத்தலே சிறந்த நூலாகும். இதை மனதிற் கொண்டு நூலினை மதிப்பிடல் அவசியம்.

14) மாணவர்களின் நிலைகட்கு ஏற்ப (கரிக்குலம்) பாடதிட்டம் அமைப்பட்டுள்ளதா என ஆய்க.

15) பாடப்பொருள் காலத்திற்குள் நடத்தமுடியுமா தேவையான அளவு கருத்துக்கள் பொதிந்துள்ளனவா என்பது காணவேண்டும்.

16) பொதுவாக எண்ணத்துடன் நோக்குதல் அவசியம்.

17) அனைத்து தரப்பட்ட மாணவர்கட்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளதா என பார்க்க வேண்டும்.

18) எளிமையாக கருத்துக்கள் சொல்லப்பட்டனவா என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

19) ஒரு வருடத்திற்குள்ளாக முடிப்பதற்கு முடியுமா என்பதை ஆயவேண்டும்.

20) மாணவர்கள் அனைத்து திறன்களையும் பெறும் அளவிற்கு உள்ளதா என பார்க்க வேண்டும்.

21) சமுதாயத்தில் அவனால் பங்கெடுக்கத்தக்க வகையில் பாடப்பொருள் உதவவேண்டும்.

22) பாடப் புத்தகம் முழுமையாக சொல்லப்பட வேண்டும். தேவையெனில் அதற்கு தேவையான மேற்பார்வை நூல்கள் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டும்.

23) பாடநூல்களை மதிப்பீடு செய்பவர்கள் தனது சிந்தனைகளை கற்பனைகளை கருத்துக்களை திணித்தல் கூடாது.

24) பொதுவான அனைவரும் ஏற்கும் வண்ணம் அமைத்தல் சிறப்பாக இருக்கும்.

மேற்கண்டவாறு பாடநூல்களை மதிப்பீடு செய்யும்போது மதிப்பீட்டாளர்கள் மாணவர், ஆசிரியர், சமுதாயம் இவற்றை மனதில் கொண்டும், கருத்துக்கள் நடைமுறை பயன்பாடுகள் இவற்றை மனதில் கொண்டும் மதிப்பிட வேண்டும். இவ்வாறு மதிப்பிட்டால் பாடநூலின் தரம் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*செய்யுளுக்கு உரை நடைக்கும் உள்ள வேறுபாடுகளை* தமிழ் கற்பித்தலில் செய்யுள் உரைநடை இரண்டிற்கு நிறைய வேறுபாடுகளை காண முடியும். இயல்பாகவே அதன் தயாரிப்பு (படைப்பு) வேறுபட்டும் அதனை முன்னிட்டு அதை கற்பிக்கும் போது கற்பித்தல் நிலை வேறுபடுகிறது. இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை நாம் பார்ப்போமாக.

*<u>வேறுபாடுகள்</u>*

| | செய்யுள் | உரைநடை |
|---|---|---|
| 1. | செய்யுள் சிறும் தலையும் அடியும் கொண்டது. | இதரற்கு அவ்வாறு உறுப்புகள் கிடையாது. |
| 2. | ஒலி நயம் கொண்டது. சந்த நயம் ஏதுகை மோனை. | சந்த நயம் கிடையாது. அடுக்கு மொழி சொற்கள் உண்டு. |
| 3. | கற்பனை நிறைய காணப்படும். கவிதையில் | உரைநடையில் கற்பனை சிறக்காது. |
| 4. | உணர்ச்சிகள் அழகும் மிளிரும். | கருத்துக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படும். |
| 5. | வர்ணனைகள் அணிகள் இடம் பெரும். | அனைத்தும் சொற்கள் வளமாக அமைக்கப்படும். |
| 6. | எதுகை நயம் மோனை நயம் செய்யுள் அமையும். | அடுக்குத் தொடர், மொழி அமையப் பெறும். |
| 7. | பொருள் சுவை நிறைந்ததாக காணப்படும். | கருத்து நிறைந்ததாக அமையும். |

மேற்கண்டவாறு நிறைய வேறுபாடுகளை சொல்லிக்கொண்டே போகலாம். அதாவது உரைநடை என்பது சொற்கள் பின்னப்பட்டது, செய்யுள் என்பது கற்பனை, உணர்ச்சி, அழகு, ஓசை நயம், உயர்வு நவிரிச்சி, வர்ணனை என யாவும் அமையப் பெற்றது. இதனை நடத்தும்போது இரண்டிற்கும் வேறுபாடுகள் உண்டு. அதனை கீழே காண்போம்.

*<u>கற்பிக்கும் போது வேற்றுமைகள்</u>*

| | செய்யுள் | உரை நடை |
|---|---|---|
| 1. | செய்யுள் பாடம் நடத்தும்போது பாடல்களை பாட்டுபாடி நடத்தலாம். | பாடல் பாட முடியாது, ஆனால் அடுக்கு மொழியில் பேசலாம் திறன்களை கற்றல் அவசியம் |
| 2. | எதுகை மோனை என சந்த நயம் உணர்த்தலாம். | இங்கே சொற்கள் பற்றிய இலக்கண உணர்வினை ஊட்டலாம். |
| 3. | எழுத்து அசை, சீர், தலை, என கற்பிக்க வேண்டும்.. | சொல், மரபு, தொடர் மரபு, பத்தி மரபு இவற்றை கற்பிக்க வேண்டும். இதன் உட் கருத்துகளை உணர்த்த வேண்டும். |
| 4. | இலக்கிய நயம் தோன்ற செய்யுளைப் படித்தல். | உரைநடையின் உணர்ச்சிப்படி நடத்துதல். |
| 5. | அருஞ்சொற்பொருள் கூறுதல் இலக்கணம் கூறுதல் தேவை. | உரைநடை விளக்கம் மட்டும் போதுமானது. |

மேற்கண்டவாறு செய்யுள் பாடத்திற்கும் உரைநடை பாடத்திற்கும் அடிப்படையாகவே நிறைய வேறுபாடுகள் உண்டு. உரைநடை என்பது உரைக்கப்படுவது எனலாம். செய்யுள் என்பது, பாடப்படுவது எனலாம். இரண்டும் வெவ்வேறான திறன் கொண்டவை இவ்விரண்டிற்கும் பாடமும் கற்பித்தல் விதம் வேறுபட்டது.

செய்யுள் பாடம் கற்பிக்கும்போது மாணவர்கட்கு கூட ஆர்வம் மிகுதிப்படும். காரணம் நிறைய கற்பனை வர்ணனைகள் அமைகிறது. வாழ்வியல் நடைமுறைகளின் நுணுக்கங்கள் உள்ளதாக மகிழ்கின்றன. இலக்கியம் என்ற பொதுவான ஒன்றில் உரைநடை வேறு செய்யுள் வேறு என்றும் அதனை பாடமாக கற்றல் கற்பித்தல் நிகழ்விற்கு உட்படுத்தினாலும் அதிலும் வேறுபாடு காணப்படுகிறது. இதை பயிற்றுவிக்கும் யாவரும் அறிவர். அதனதன் தனித்தன்மை வெளிப்படுகிறது. பெறப்படும் பயன்பாடுகளும் வேறுபடுகிறது. மகிழ்ச்சியும் வேறுபடுகிறது என்பதில் ஐயமில்லை.

*ஒலி நூலார் கொள்கைப்படி தமிழ் மெய் எழுத்துக்களை எங்ஙனம் வகைபடுத்துவார்*

ஒலியியலார் மெய் எழுத்துக்களை இருவகையாக பிரிப்பர். 1) குரல் நானத்தில் அதிர்வு ஏற்பட பிறக்கும் ஒலி. 2) அதிர்வு ஏற்படாமல் பிறக்கும் ஒலி என இருவகையாக பிரிப்பர். உதாரணம்: அங்கு, தங்கு, பங்கு போன்ற சொற்களில் வரும் ககரம் அதிர்வு ஏற்பட பிறக்கும் ஒலியாகும். கம்பி, கட்டு போன்ற சொற்களில் ககரம் அதிர்வு இல்லாமல் பிறக்கும் ஒலிகளாகும்.

மற்றொரு வகை தடையொலி எனப்படும். காற்று சவ்வுகட்டு மேலே வரும். மூச்சு அடையும் மாற்றங்கள் கொண்டதாகும். உதாரணம்: ப என்பது மூச்சை (காற்றை) மேலே போகவிடாமல் தடைசெய்யும். அது நா, நா, நுனி, இதழ், பின் அன்னம், இவ்வாறு தடுத்து வரும் ஒலி ப பிறக்கிறது. இதற்கு தடையொலி எனப்படும்.

மற்றொரு வகை தடை செய்யப்பட்ட ஒலி திடீர் என்று விடுவிக்கப்பட்டால் அது ஒரு வகை ஓசையுடன் பிறக்கின்றது. இதற்கு வெடிப்பொலி என பெயர். ப என்பதே உதாரணம் ப விற்கு மூச்சு நிறைய தடை ஒலி எனவும் அழைக்கின்றனர்.

இன்னொரு வகை ஒலிகள் முக்கொலிகள் ஆகும். காற்றுச் சவ்வைத் தாண்டி வரும் மூச்சு வாய்வழியே வராது மூக்கு வழியாக போவதால் முக்கொலிகள் பிறக்கின்றன. லகர ஒலி, இவ்வொலி பிறக்குங்கால் மூச்சு. நாவின் மேற்புறமாக பக்கவாட்டில் சிதறிபிறக்கின்றது. ர கர ஒலி காற்று சவ்வுக்கு மேலே இருக்கின்ற உறுப்புகள் அதிர்வால் பிறக்கின்றன. வருடொலி என்பது மிகவும் குறைந்த கால அளவில் உண்டாகப் பெறும். ஒரு வகை ஒலியாகும். இதனை ஒரு நொடியில் உண்டாகும் தடையொலி என கூறலாம். அன்னத்தை நா வளைந்து தடவுவதால் இவ்வொலி உண்டாகிறது. படம் என்னும் சொல்லில் ட வருடொலியாகும். சுருங்கக் கூறினால் மொழியியலார் ஒலிகள் பிறக்கும் இடங்களான இதழ், இதழும் பல்தம், பல், பல்லீறு வளைவு அன்னம், பின் அன்னம், குரல்வலை ஆகியவற்றைச் சுட்டியுள்ளர்.

1) தடையொலி – குரலில்லா தடையொலி, குரல் நிறை தடையொலி – ப / க

2) உரசல் தடையொலி – குரலில்லா உரசல் தடை ஒலி, குரல் நிறை உரசல் தடையொலி – ச.

3) உரசல் ஒலி – குரலில்லா உரசல் ஒலி, குரல் நிறை உரசல் ஒலி – ஸ

4) மூச்சொலி – ம, ங, ன

5) ர, கர ஒலி – ர்

6) வருடொலி – ட

7) அடை உயிரொலி – ப், வ்

ஒலியியலை தெளிவாகப் புரிந்து கொள்வது மொழி அசிரியரின் கடமையாகும். ஒலி மொழியின் ஆக்கத்திற்கு காரணமானது. மாணவர்களை பிழையின்றி தெளிவாக ஒலிக்கச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு ழுகரம், ளகரம், லகரம் போன்ற சொற்களை ஒலிக்கச் செய்து பயிற்சி தரப்பட வேண்டும். அதுபோல ற, ர, ஒலிகளையும் வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டும். மேலும் ன, ண, ந, ஒலிகளையும் நம் உச்சரிப்பில் வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டும்.

குழந்தைகட்கு தகர, டகர, ஒலிகளும் சரிவர உச்சரிக்காது. அதனை உடனே திருத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒலியியலார் மெய்யொலிகளை இவ்வாறு பல வகைப்படுத்தியுள்ளனர். என்பதை அறிய முடிகிறது. இஃது யாவும் மொழியை மாணவர்கள் பிழையின்றி பேசவும், எழுதவும் மொழி வளத்தை தனக்குள் மேம்படுத்தவும் உதவும் என்பது திண்ணம்.